# மாலை மயக்கம்

இளமை எழுத்தாளர்

**மணிமாலா**

## 1

"**அ**ஸ்வினி! இந்த இட்லியைக் காக்காவுக்கு வச்சிட்டு வந்திடேன்" செண்பகம் சிறிய தட்டில் ஒரு இட்லியை வைத்து மகளிடம் நீட்டினாள்.

"நான் இன்னும் தலைகூட வாரலே. செல்விகிட்டே கொடுத்தனுப்பேன்!" ஈரக் கூந்தலில் சிக்கெடுத்தபடி சிணுங்கிய அஸ்வினி, செப்புச் சிலை போல் அழகாயிருந்தாள்.

"அவதான் அவசர அவசரமா பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பிட்டிருக்காளே!"

"அப்ப எனக்கு மட்டும் காலேஜுக்கு நேரமாகலையாக்கும்?"

"உனக்கென்ன? அமுதாவோட மொபெட்டுல நோகாம போயிடுவே. செல்வி அப்படியா? உனக்கு அமுதா கிடைச்ச மாதிரி, அவளுக்கு ஒரு குமுதா கிடைக்கலியே! பாவம்...



அவ இடிபட்டு, மிதிபட்டு பஸ்லே இல்லே போக வேண்டியிருக்கு!" அங்கலாய்த்தாள், செண்பகம்.

"எங்க மேலே திருஷ்டி விழ யார் கண்ணும் வேண்டாம். உன் கண்ணே போதும், கொடு இப்படி" செல்லமாய்ச் சிணுங்கிக்கொண்டே அம்மாவிடமிருந்து தட்டைப் பிடுங்கி மொட்டை மாடிக்குச் சென்றாள், அஸ்வினி.

"காலையிலே அவளை வம்புக்கு இழுக்கலேன்னா உனக்கு நிம்மதி வராதே!" குளித்து முடித்துவிட்டு உடம்பைத் துடைத்துக்கொண்டே மனைவியிடம் வந்தார், சேதுராமன்.

"உண்மையைத்தானே சொன்னேன்?"

"நானும் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கேன். ஆனா, அஸ்வினி– அமுதா மாதிரி இணைபிரியாத தோழிகளைப் பார்த்ததே இல்லை."

"நான் இப்பதான் புதுசா இந்த வீட்டுக்கு வந்திருக்கிற மாதிரியில்லே சொல்றீங்க? இதெல்லாம் எனக்குத் தெரியாதா?"

"அப்புறம் ஏன்டி கண்ணுப் போடுறே?"

"ஆமா... இதுலே எனக்கு வருத்தம் பாருங்க... அதனால கண்ணுப் போடுறேன். ரெண்டு குழந்தைகளையும் பார்த்து நான் எவ்ளோ ஆனந்தப்படுறேன்னு எனக்குத்தான் தெரியும். பெத்தவ கண்ணுபட்டுதான் திருஷ்டி விழுந்திடப் போகுதாக்கும்?"

"சரி... சரி... உன்னைப் பேசவிட்டா இன்னைக்கு முழுக்க பேசிக்கிட்டேதான் இருப்பே! எனக்கும் ஆபீசுக்கு நேரமாயிடுச்சு. சாப்பாடு தயாரா?"

"தயாராகாமலா காக்காவுக்குக் கொடுத்தனுப்பினேன்?"

"பதிலுக்குப் பதில் பேசிட்டிருக்காம முதல்ல எடுத்து வை."

"பேசத் தொடங்கினது நீங்க. பழி என் மேலேயா?"

"மன்னிச்சிடு லோகமாதா... முதல்ல சாப்பாடு எடுத்து வை"

சற்றே எரிச்சலுடன் பேசிவிட்டு அகன்றார், சேதுமாதவன்.

இவர்கள் பேசுவதைக் கேட்டுச் சிரித்தபடி படியிறங்கினாள், அஸ்வினி.

"என்னடி சிரிப்பு வேண்டிகிடக்கு?"

அம்மா கோபமாய்க் கத்துவது கண்டு அவளின் சிரிப்பு அதிகமானது.

"அப்பாகிட்டே நல்லா வாங்கிக் கட்டினியா?"

"இப்ப என்கிட்டே வம்படிக்க மட்டும் நேரமிருக்கா? போ... போய் துணியை மாத்து."

"என்ன... பேச்சு திசைமாறுது?" என்றவள், தன்னறைக்குள் நுழைந்தாள்.

"அப்பாவுக்கும், பொண்ணுக்கும் என்னைக் கண்டாலே இளக்காரம்தான்!" முணுமுணுத்தபடி உணவை எடுத்து வைத்தாள், செண்பகம்.

"ஆனா, நான் எப்பவும் உன் கட்சிதாம்மா!" அம்மாவின் தோளில் வந்து தொற்றிக்கொண்ட செல்வி, பள்ளிச் சீருடையில் கண்களை உறுத்தும் வகையில் சிக்கென்றிருந்தாள்.

"வாம்மா! உட்காரு. சாப்பாடு எடுத்து வைக்கிறேன். அதுக்கு முன்னாடி, இந்தா உன்னோட மதியச் சாப்பாடு... முதல்ல பையில வச்சிட்டு வா!"

"சரிம்மா" என்றபடி அம்மா கொடுத்த சாப்பாட்டை வாங்கிக்கொண்டு சென்றாள்.

மேசை முன் வந்தமர்ந்த சேதுராமனுக்கும், செல்விக்கும் சாப்பாடு பரிமாறினாள், செண்பகம்.

"எங்கே அஸ்வினி?"

"வருவா... துணி மாத்திட்டிருக்கா... நீங்க சாப்பிட்டுக் கிளம்புங்க."

"அப்பா... நானும் வந்தாச்சு" அப்பாவின் பக்கத்தில் வந்தமர்ந்தாள், அஸ்வினி.



செண்பகம் அவளுக்கும் பரிமாற...

உள்ளே நுழைந்தாள் அமுதா. குறையில்லா அழகிற்கு சொந்தக்காரி.

"அஸ்வினி! என்ன சாப்பிடுறே?"

"வழக்கமான இட்லி– சாம்பார்தான்!"

"ஆனா, உனக்கு புட்டுதானே ரொம்ப பிடிக்கும். இந்தா... இதை உனக்காக என் வீட்டு சமையல்காரிகிட்டே சொல்லி எடுத்துட்டு வந்தேன். இதைச் சாப்பிடு!"

அமுதா கட்டளையிட, ஆர்வமாய் அவள் நீட்டியதை வாங்கிக்கொண்டாள்.

"ஆனா, எனக்குப் பிடிச்சதென்னவோ மணக்க மணக்க மாமி வைக்கிற இந்த வெங்காய சாம்பாரும், இட்லியும்தான். அது, வீணாப் போயிடக்கூடாது. உன் தட்டை இப்படித் தள்ளு!" உரிமையுடன் அவள் தட்டைத் தன் பக்கம் இழுத்துச் சாப்பிடத் தொடங்கினாள்.

அஸ்வினியைத் தவிர, அங்கிருந்த மற்ற மூவரும் அவள் செய்கையை வியப்புடன் பார்த்தார்கள்.

"என்ன மாமி அப்படிப் பார்க்கிறீங்க?"

"இல்லே... அவ சாப்பிட்ட எச்சிலை எந்த அசூயையும் இல்லாம எடுத்துச் சாப்பிடுறியே... அதான்!" ஆச்சரியம் விலகாமல் கேட்டாள்.

"இதிலே ஆச்சரியப்பட என்ன இருக்கு? நான் வேற, அஸ்வினி வேற இல்லையே?"

"கேக்கவே மகிழ்ச்சியா இருக்கும்மா. ஆனா, ஒருத்தர் மேலே ஒருத்தர் இவ்வளவு நெருக்கமா இருக்கீங்களே. உங்களுக்குள்ளே பிரிவுன்னு ஒண்ணு வந்தா எப்படித் தாங்கிக்கப் போறீங்க?"

"பிரிவா... எங்களுக்குள்ளேயா? என்னம்மா உளறுறே?" என்றாள் கோபமாய், அஸ்வினி.

"இதிலே உளறுறதுக்கு என்ன இருக்கு? நடக்கப்போறதைப் பற்றிதானே பேசுறேன்? ஆண்களோட நட்பாவது கடைசி வரை சாத்தியம். ஆனா, பெண்கள் அப்படியில்லையே! கல்யாணம் பண்ணிக்கிட்டு ஆளுக்கொரு மூலையிலே வாழப்போறீங்க. உனக்குன்னு ஒரு குடும்பம், அவளுக்குன்னு ஒரு குடும்பம்னு ஆகிடும். அதுக்குப்பிறகு கணவனையும், குழந்தைகளையும், வீட்டையும் பார்த்துக்கிறதுக்கே நேரம் போதாது."

செண்பகம் அப்படி சொன்னதும் அமுதாவும், அஸ்வினியும் கலக்கத்துடன் ஒருவரையொருவர் பார்த்தனர்.

'இப்படியெல்லாம் நடக்குமா?' என்கிற பரிதவிப்பு.

சேதுராமனும், செல்வியும் அங்கு நடக்கும் கூத்தை சுவாரசியத்துடன் பார்த்தபடி சாப்பிட்டார்கள்.

"அது... அதெப்படி? எங்களை யாராலும், எந்த உறவாலும் பிரிக்க முடியாது" என்றாள், அமுதா, குரல் பிசிறடிக்க.

"ஆளுக்கொரு திசையிலே மாப்பிள்ளை அமைஞ்சா?"

"அப்படிப்பட்ட மாப்பிள்ளை எங்களுக்கு வேண்டாம்."

"நீங்க பிரியாம இருக்கணும்னா ஒரே ஒரு வழிதான் இருக்கு!"

"என்ன வழி மாமி... சொல்லுங்க?" ப்ரபரத்தாள் அமுதா.

"ரெண்டு பேரும் ஒரே மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்குங்க!"

அதைக்கேட்டு சேதுராமனின் முகம் ஜிவுஜிவுத்தது. "செண்பகம்... உனக்கென்ன கிறுக்கா பிடிச்சிருக்கு? என்ன பேசுறோம்னு புரிஞ்சுதான் பேசுறியா?"

"இ... இல்லைங்க... சும்மா விளையாட்டுக்குத்தான்..."

"விளையாட்டுக்குப் பேசுற பேச்சா இது?"

அரண்டுபோய்விட்டாள், செண்பகம்.

"மன்னிச்சிடுங்க!"



"இனியொருமுறை இப்படிப் பேசாதே! பொம்பளைங்க மனசைப் பற்றி உனக்குத் தெரியாதா? எதிலே வேணும்னாலும் பங்கு போட்டுக்குவாங்க. ஆனா, கணவனைப் பங்கு போட்டுக்குவாங்களா?"

"மாமா... விடுங்க. விளையாட்டா சொன்னதை ஏன் பெரிசா எடுத்துக்கிறீங்க? மாமி புத்திசாலித்தனமா ஒரு யோசனை சொல்லுவாங்கன்னு நினைச்சேன். இப்படி உங்ககிட்டே வசமா மாட்டிக்குவாங்கன்னு கொஞ்சம்கூட எதிர்பார்க்கலே!"

"என்னையும், அமுதாவையும் கல்யாணம்ங்கிற ஒரு சடங்கு பிரிக்கும்னா... அப்படிப்பட்ட கல்யாணமே வேண்டாம்" என்றாள், அஸ்வினி.

பதறிப் போனார், சேதுராமன்.

"சேச்சே... என்ன பேசுறே நீ? இப்ப என்ன, கல்யாணமானாலும் நீங்க ரெண்டு பேரும் பிரியக்கூடாது. அவ்வளவுதானே? பேசாம... உங்க ரெண்டு பேருக்கும் ஒரே வீட்டிலே அண்ணன்– தம்பியா பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சிட்டா போச்சு."

"நல்ல யோசனைப்பா!" முகம் மலர்ந்தாள், அஸ்வினி.

"மாமான்னா மாமாதான்" என்று பாராட்டினாள், அமுதா.

சற்று நேரத்தில் தோழிகள் இருவரும் புறப்பட்டுச் சென்றனர்.

"நீங்க சொன்ன யோசனை மட்டும் நடக்கிற காரியமா?" கேட்டாள், செண்பகம்.

"ஏன் அப்படிக் கேட்கிறே?"

"அமுதா யார்? பெரிய பணக்கார வீட்டுப் பெண். அதுவும் ஒரே பெண். அவங்க அந்தஸ்துக்கும், தகுதிக்கும் எந்த மாதிரி பெரிய இடத்துல மாப்பிள்ளை பார்ப்பாங்க. நாம அப்படியா? கணக்குப் போட்டு வாழுறவங்க. நம்ம அஸ்வினிக்கு அப்படிப் பட்ட இடத்துல வரன் பார்த்து வாழவைக்க முடியுமா?"

"இதோ பாரு செண்பகம்! யாருக்கு என்ன விதிச்சிருக்கோ,

அதுப்படிதான் நடக்கும். இப்படியும் நடக்கலாம், அப்படியும் நடக்கலாம். சின்னஞ்சிறுசுங்க... அதுங்க மனசை அது இதுன்னு சொல்லிக் கலங்கடிக்க விரும்பலே. அவங்க ஆசைப்படி கடைசிவரை பிரியக்கூடாதுன்னு வேண்டிக்கிறேன். எனக்கு என்னவோ அவங்க ரெண்டு பேரும் பிரியவே மாட்டாங்கன்னுதான் மனசுக்குத் தோணுது" என்றார், நம்பிக்கையாய் சேதுராமன்.

## 2

அவர்கள் இருவரும் ஒன்றாகப் பயணித்தது, இரண்டு மயில்களை ஒருசேரப் பார்ப்பது போலிருந்தது.

இளம் காலை வெயில் அவர்கள் முகத்தை மேலும் பொன் நிறமாக்கி, பளபளக்க வைத்தது. வண்டியை ஓட்டிக் கொண்டிருந்த அமுதாவின் விழிகள், சூரிய வெளிச்சத்தை எதிர்நோக்க தைரியமற்று சுருங்கின.

"இன்னைக்கு 'ஹெல்மெட்' போட்டுட்டு வர மறந்திட்டியா அமுதா?" கண்ணாடியில் தெரிந்த அவளின் முகத்தைப் பார்த்துக் கவலையுடன் கேட்டாள்.

அமுதாவின் எண்ணங்கள் எங்கோ சிறகடித்துப் பறந்தன. அதனால் அஸ்வினியின் குரல் அவள் சிந்தையைத் தொடவில்லை.

"அமுதா..."

"........"

"அமுதா... உன்னைத்தான்!"

"உம்... எ...என்ன?" சட்டென வண்டியை நிறுத்தினாள்.

"என்னாச்சு அமுதா? நல்லாதானே இருக்கே?" மிரட்சியுடன் கேட்டாள், அஸ்வினி.



"என்னமோ கேட்டியே?"

"நீ சரியில்லே அமுதா. உன் மனசை ஏதோ ஒரு கவலை அழுத்திக்கிட்டிருக்கு. இந்த அழகுல எப்படி வண்டி ஓட்டுறே? முதல்ல இறங்கு."

"இல்லே... ஒண்ணுமில்லே..."

"இல்ல... இருக்கு. என் அமுதாவோட முகத்தை வச்சே அவ மனசுல என்ன இருக்குங்கிறதை என்னால் கண்டுபிடிக்க முடியும். அதோ அந்த ஓட்டலுக்குப் போகலாம் வா!"

"ஒண்ணுமில்லேடா... நீயா எதையும் கற்பனை பண்ணிக்காதே. காலேஜுக்கு நேரமாயிடுச்சு. வகுப்பு தொடங்கிடும்."

"அதெல்லாம் இருக்கட்டும். முதல்ல உன் மனசுதான் எனக்கு முக்கியம். நீ வா... சொல்றேன்!" அஸ்வினி அவளுக்கு முன்னே நடக்க, வேறு வழியின்றி அவள் பின்னே வண்டியைத் தள்ளிச் சென்றாள், அமுதா.

காலியாய்க் கிடந்த மேசையின் முன் அமர்ந்தனர். காப்பி குடித்தனர்.

ஆருயிர்த் தோழியை ஆழ்ந்து நோக்கினாள், அஸ்வினி. கலக்கத்துடன் அவள் விழிகள் அலைபாய்ந்தன.

"சொல்லு அமுதா... என்ன பிரச்சினை?"

இப்படியொரு கேள்வியை அவள் எதிர்பார்க்கவில்லை. திகைப்புடன் நோக்கினாள்.

"நாம பிரிஞ்சிடுவோமோ?"

"என்ன அமுதா சொல்றே? என்ன இது பைத்தியக்காரத்தனமான கேள்வி?"

"இப்படி இருக்க முடியாது, அப்படியிருக்க முடியாதுன்னு நம்மளைச் சமாதானப்படுத்திக்க நாமளே ஏதேதோ காரணங்களைச் சொல்லிக்கிறோம்னு தோணுது. உங்கம்மா சொல்ற மாதிரி, கல்யாணம் நடந்து கணவன் என்கிற புது உறவு வந்து நம்மைப் பிரிச்சிடுமோன்னு பயமா இருக்கு!"

"ஏன்... எங்கப்பா சொன்ன மாதிரி ஒரே வீட்டே அண்ணன்– தம்பிகளா பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கிட்டா போச்சு!"

"அதெல்லாம் நடக்குங்கிறது நிச்சயமில்லே. உனக்கே தெரியும். நான் வாழப்போகிற இடத்திலே எந்தப் பிக்கல் பிடுங்கலும் இருக்கக்கூடாதுங்கிறதுக்காக, நிறைய சொத்துடன் ஒரே வாரிசா உள்ள வரனா எங்க வீட்லே தேடிக்கிட்டிருக் காங்க. உனக்கு வெளியூர்லே வரன் அமைஞ்சிட்டா நீ என்னைப் பிரிஞ்சி போயிடுவே இல்லே?"

"நிச்சயம் மாட்டேன் அமுதா! நீ கல்யாணம் பண்ணிக் கிட்டாலும், நான் பண்ணிக்கப் போறதில்லே. அப்பதான் உன்னை நினைச்சப்பவெல்லாம் வந்து பார்க்க முடியும்!"

"நடைமுறைக்கு ஒத்துவராத முடிவு! எத்தனை காலத் துக்கு துணையில்லாம வாழ்ந்திட முடியும்? உன் அப்பா, அம்மாதான் விட்டுடுவாங்களா என்ன?"

"அப்ப இதுக்கு என்னதான் முடிவு?"

"நமக்கு வரப்போகிற கணவர்கள் நமக்கு நண்பர்களா இருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும்?"

"நண்பர்களாய் இல்லாவிட்டாலும் நாம அவர்கள் இருவரையும் நண்பர்களாய் ஆக்கிட வேண்டியதுதான்!"

"அதுமட்டுமில்லே அஸ்வினி. நாம பக்கத்துப் பக்கத்து வீடாய் இருந்தால் இன்னும் நன்றாயிருக்கும். இன்று போல் எப்போதும் பிரியாமல் இருக்கலாம். கவலைப்படாதே... உன் புகுந்த வீட்டுக்குப் பக்கத்திலேயே எனக்கு ஒரு வீடு வாங்கித் தரச்சொல்லிடுறேன். அப்பா கண்டிப்பாய் வாங்கித் தருவார்!"

"நாம பேசிக்கிறது சிறுபிள்ளைத்தனமாய் இருந்தாலும், நாம நினைக்கிறதெல்லாம் நடந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" கண்களில் சிறு ஏக்கம் படரக் கூறினாள், அஸ்வினி.

"எல்லாமே நம்ம கையில்தான் இருக்கு. திருமண விசயத்தில் அவசரப்படாம முடிவெடுக்கணும்."



"சரி... நேரமாகிடுச்சு... கிளம்பலாமா?"

"உம்..."

பணம் கொடுத்துவிட்டுக் கிளம்பினார்கள்.

அமுதாவின் மனசு இப்போது கொஞ்சம் தெளிவாய் இருந்தது.

ஒரு பெரிய பிரச்சினைக்குத் தீர்வு கண்டது போல் நிம்மதி படர்ந்திருந்தது.

மொபெட்டில் ஏறி அமர்ந்து புறப்பட்டபோது, அவர்கள் பக்கத்தில் ஒரு உயர்ரக கார் வந்து நின்றது.

கண்ணாடி இறக்கப்பட்டு ஒரு குரல் "அலோ... அமுதா!" என்றது.

வியப்பும், மகிழ்ச்சியுமாய் விழி அகன்றது, அமுதாவுக்கு.

"அலோ பரத்!" உற்சாகமாய் வெளிப்பட்டது அமுதாவின் குரல்.

பரத் என்ற பெயர் காதில் விழுந்ததும்தான் தாமதம், உடல் முழுக்க சிலிர்க்க... சட்டெனத் திரும்பினாள், அஸ்வினி.

"ரெண்டு பேரும் இங்கே என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க?" பரத்தின் கண்கள் அஸ்வினியை அளவெடுத்தன.

"கடைக்கு வந்து எல்லாரும் என்ன பண்ணுவாங்க?"

"காலேஜுக்கு நேரமாகலே?"

"கிளம்பிக்கிட்டே இருந்தோம். அதுக்குள்ளே நீங்க வந்து மடக்கிட்டீங்களே!"

"ஓகோ... நான் வந்து மடக்கிட்டேனா?" இதழ்க் கடையோரம் அரும்பிய புன்னகையுடன், யதார்த்தமாய் பார்ப்பது போல் அஸ்வினியைப் பார்த்தான்.

அஸ்வினியின் இதயம் படபடவெனத் துடிக்க... தலை கவிழ்ந்தாள்.

"ஆமாம்... மடக்கிட்டீங்க!" என்ற அமுதா, பரத்தின்

கம்பீரத்தைக் கண்ணுக்குள் நிரப்பி ஆனந்தப்பட்டாள்.

இளம் நீலநிற சல்வாரில் ஒப்பனையில்லாமல் பளபளத்த முகத்திற்கு எடுப்பாய் சின்ன பொட்டு, கிளிப்பில் அடக்கப்பட்ட அடர்ந்த கூந்தலுடன் பாந்தமாய் நின்றிருந்த அஸ்வினியைப் பார்க்கும்போது பரத்தின் மனசிற்கு இதமாய் இருந்தது.

அவள் தன்னிடம் பேசமாட்டாளா? என்று ஏக்கமாய் இருந்தது.

அஸ்வினியின் நிலையும் அதுதான்.

பரத் பார்க்காதபோது, அவனைப் பார்த்ததில் அவள் நாடித்துடிப்பு கூடியது.

பொதுவாய் பரத், அமுதாவிடம் எதையெதையோ பேசினாலும் அவன் கவனமெல்லாம் அஸ்வினியிடமே இருந்தது.

பரத், வேறு யாருமல்ல. அமுதாவின் மாமா மகன்தான். அமுதாவின் அம்மா தனலட்சுமியின் அண்ணன் மகன்.

சொந்தமாய் குளிர்பானத் தொழிற்சாலை நடத்திவரும் இளம் தொழிலதிபர்.

“மாமாவும், அத்தையும் எப்படியிருக்காங்க அமுதா?”

“உங்க மேலே ரொம்ப கோபமா...”

“கோபமா... ஏன்?”

“பின்னே? ஒரே ஊரில் இருந்துகிட்டு ஆண்டுக்கு ரெண்டு மூணு தடவை எங்க வீட்டுக்கு வந்து தலையைக் காட்டிட்டுப் போனா, கோபம் வராம என்ன செய்யும்? இந்த விசாரிப்புக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே" என்றாள் செல்லமாய் கோபப்பட்டு.

"என்ன அமுதா? உனக்கு என்னைப் பற்றித் தெரியாதா? சிமெண்டு தொழிற்சாலையை நான் கவனிக்கலேன்னு அப்பாவுக்கு கோபம். எனக்கு விருப்பம் இல்லாத தொழில்ல ஈடுபட்டு என்ன சாதிக்க முடியும்? என் வேலைக்கே நேரம்




# கோலப் போட்டி

தேர்ந்து எடுக்கப்படும் வண்ணக்கோலத்துக்கு ரூ. 100 பரிசு! அனுப்பவேண்டிய முகவரி: கோலப்போட்டி, "ராணி முத்து", சென்னை–600 007.

<u>பரிசுபெற்ற கோலம்:</u>

## தீபக் கோலம்



21 புள்ளி 11 வரை ஊடுபுள்ளி.

—சண்முகசுந்தரி, நெல்லை.

# கர்ப்ப காலத்தில் கவனம் தேவை

எப்போதும் கவனம் தேவைதான். ஆனால், கர்ப்ப காலத்தில் பெண்கள் கூடுதல் கவனமாக இருக்க வேண்டும். காரணம்– பிரசவத்தின்போதும், பேறுகால நோய்களாலும் உயிரிழப்பு ஏற்படுகிறது. ஆண்டுக்கு 6 லட்சம் பெண்கள் இப்படி உயிரிழப்பதாக ஆய்வு தெரிவிக்கிறது.



எனவே, கர்ப்ப காலத்தில் நல்ல மருத்துவரிடம் இடையிடையே பரிசோதித்துக் கொள்ளுங்கள். தனிக்குடித்தனம் போகும் பெண்களுக்கு வாந்தி, மயக்கம் வந்தால் சிரமமாகி விடும். அவர்களுக்குக் கணவன் அதிக துணையாக இருக்க வேண்டும்.

பருவ வயதை எட்டியும் பூப்பெய்தா விட்டால் மருத்துவரைப் பாருங்கள். சில பெண்களுக்கு அதிக ரத்தப்போக்கு ஏற்படும். அடிக்கடி கருக்கலைப்பு செய்தாலோ, கருத்தடை சாதனம் பொருத்தியதாலோ, அப்படி இருக்கலாம். சிலநேரம் ரத்தப் புற்றுநோயாகக்கூட இருக்கும். அதையும் கவனிக்க வேண்டும்.

பெண்களுக்கு அடிக்கடி உடல் சோர்வு ஏற்படலாம். அதனால் சத்து நிறைந்த உணவுகள், காய்கறிகள் சாப்பிடுங்கள். உயிர்ச்சத்து, இரும்புச்சத்து மாத்திரையும் சாப்பிடலாம்.

உடல் பருமனாக இருந்தால் புரதச்சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிடுங்கள். பச்சைக் காய்கறி நல்லது.



சரியா இருக்கு. அப்புறம் எப்படி நான் உங்க வீட்டுக்கெல்லாம் வந்து தலையையும் வாலையும் காட்டிட்டுப் போக முடியும்?"

அவனின் நையாண்டிக்கு வாய்விட்டுச் சிரித்த அமுதா, "எனக்குத் தெரியாதா பரத்? ஆனா, அதேநேரம் எப்பவும் வியாபாரம், தொழில்னு எந்திரத்தனமா அலைய வேண்டாமேன்னு தோணுது!"

"நாளைக்கே சாதிக்கப் போகிறோம்ங்கிற எண்ணத்தோட உழைச்சாதான் இன்னைக்கே நாம நினைச்சதை அடைய முடியும். கடந்துபோகிற ஒவ்வொரு நிமிசத்தையும் கடவுளே நினைச்சாக்கூட திருப்பித் தரமுடியாது. நேரத்தை வீணாக்குவது எனக்குப் பிடிக்காத ஒண்ணு. இதுதான் உழைக்கிற, சாதிக்கிற வயசு. பொழுதுபோக்குக்கு இடம் கொடுத்தா... இதுதான் அனுபவிக்கிற வயசு, நேரத்தை வீணா செலவழிக்காம, காரணமா அலையணும்னு தோணும்."

"இப்ப உங்களை நான் எந்தப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிக்குக் கூப்பிட்டேன்னு பக்கம் பக்கமா தத்துவம் பேசுறீங்க?"

"உன்னை விட்டா இன்னும் ஒரு மணி நேரத்துக்கு கேள்வி மேலே கேள்வி கேட்டுத் திணறடிச்சிடுவே! வரட்டுமா? அடுத்த வாரம் வீட்டுக்கு வர்றேன்னு அத்தைகிட்டே சொல்லிடு. நீயும் ஒரு நாளைக்கு ஆபீசுக்கு வாயேன், உன் தோழியையும் அழைச்சுக்கிட்டு."

"உம்... வர்றேன்!"

"உன் தோழி ஊமையா? வாயைத் திறந்து பேச மாட்டாங்களா?"

"பேசேன் அஸ்வினி. அப்புறம் செவிடுன்னு சொல்லிடப் போறார்!"

"ஏய்... சும்மாயிரு... வேண்டாம்!" வெட்கத்துடன் அமுதாவின் முதுகின் பின் மறைந்து முணுமுணுத்தாள்.

"என்னடி வெட்கம்? பரத்தை ஏற்கனவே நீ பல தடவை பார்த்திருக்கே. அப்புறமென்ன?"

"அதானே... என்னைப் பார்த்து ஏன் இத்தனை வெட்கப் படுறீங்க, கிராமத்துப் பொண்ணு மாதிரி! சரி... கிளம்புறேன் அமுதா. ஒரு முக்கியமான வேலை இருக்கு. வரேன் அஸ்வினி!" அவளை நோக்கி கையசைத்துவிட்டு காரைக் கிளப்பினான், பரத்.

அஸ்வினி அந்தக் காரையே ஏக்கத்துடன் பார்த்தாள்.

அமுதாவின் மனமோ வெறுமையானது போலிருந்தது. 'நல்ல பையன்!' தனக்குத்தானே சிலாகித்துக்கொண்டாள்.

"அஸ்வினி!"

"உம்..."

"நீ பரத்தைப் பற்றி என்ன நினைக்கிறே?"

திடுக்கிட்டு நிமிர்ந்தாள், அஸ்வினி.

"ஏ... ஏன் அப்படிக் கேட்கிறே?"

"ப்ச்... சும்மாதான்... சொல்லேன்!"

"நாகரிகமான இளைஞர்" என்றாள் சிக்கன வார்த்தையில்.

"ஆமாம் அஸ்வினி. பரத் மாதிரி ஆண்கள் இருப்பது அபூர்வம். எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை. உனக்கும் சரி எனக்கும் சரி, இப்படிப்பட்ட ஆண்தான் கணவனா வாய்க்க ணும்!" அமுதாவின் கண்கள் சொல்லும்போதே பளிச்சிட்டன.

அஸ்வினியோ, திகைப்புடன் தோழியைப் பார்த்தாள்.

## 3

அந்த அலுவலகத்தின் ஒவ்வொரு செங்கலும் பரத்தின் உழைப்பால் எழுந்தவை. உதவிக்கு நான்கு பேரை வைத்துத் தொடங்கிய நிறுவனம், இன்று பிரமாண்ட தொழிற்சாலை யாகி, நானூறு பேர் வேலை செய்ய, சக்கைபோடு போடுகிறது.



பரத், கதாநாயகனைப் போன்ற தோற்றத்தைக் கொண்டவன். அவனைப் பார்க்கும் எந்தப் பெண்ணுமே இவன் நம் வாழ்க்கைத் துணைவனாய்க் கிடைத்தால் நன்றாயிருக்குமே என்று எண்ணாமல் இருக்கமாட்டாள். அப்படி அதிருஷ்டம் ஒரு சில ஆண்களுக்கு மட்டுமே கிடைக்கும். அதில் ஒருவன் பரத்.

இதுவரை அவன் மனதில் எந்தச் சலனத்திற்கும் இடம் கொடுத்ததில்லை. அவனின் சிவந்த அதரங்கள், சிகரெட்டைத் தொட்டதில்லை.

எத்தனையோ பெண்கள் காதலிப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். ஆனால், அந்தப் பெண்களில் ஒருவரும் அவனுள் காதலை ஏற்படுத்தவில்லை. இத்தனைக்கும் அவர்கள் சாதாரண பெண்களில்லை. அழகிப் போட்டியில் கலந்து கொள்ளுவதற்கு தகுதிபடைத்தவர்களும், பணக்கார யுவதிகளும்தான்.

ஆனால், அவர்களால் முடியாத ஒரு பெரிய விசயத்தை மவுனமாகவே செய்துவிட்டாள், அஸ்வினி.

அஸ்வினியை அமுதாவுடன் ஏழெட்டு முறை இப்படித்தான் நடுவழியில் பார்த்திருக்கிறான். ஆனால், பேசியதில்லை.

அவளின் அடக்கமும், மென்மையான அழகும் அவனைப் பெரிதும் கவர்ந்தன.

ஒரு பெண், ஆணின் உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழச் செய்பவளாய் இருக்கக்கூடாது.

மனதை மயிலிறகால் வருடுவது போன்ற இதத்தைத் தருபவளாய் இருக்க வேண்டும். 'அவள் மடியில் படுத்து நிம்மதியாய் உறங்கமாட்டோமா?' என்று ஒரு ஆணை ஏக்கமுறச் செய்வதுதான் ஆழமான காதல்! அப்படி ஒரு ஏக்கத்தை அவனுக்குள் அஸ்வினி உண்டாக்கிவிட்டாள்.

அவனின் அலுவலகம். எப்போது வந்தாலும் கேட்பதற்கு ஆளில்லை. ஆனால், அஸ்வினியைப் பார்க்க வேண்டும்

என்பதற்காகவே எட்டு மணிக்கே புறப்பட்டு அந்தச் சாலையில் காத்திருந்தது. அவன் மட்டுமே அறிந்த ரகசியம்.

அவனைப் பார்த்த மாத்திரத்தில் சிட்டுக்குருவியின் சிறகாய் அஸ்வினியின் இமைகள் படபடக்கும்.

அந்த இமைகளுக்குள் பொதிந்து கிடப்பது காதலா? நட்பா?

வியாபார சக்கரவர்த்தி பரத்தால் அதை மட்டுமே கண்டுணர முடியவில்லை.

அவனுக்குத் தன்னை நினைத்து வெகுவாய் ஆச்சரியம் ஏற்பட்டது.

அவன் கையிலிருந்த பேனா, அஸ்வினி... அஸ்வினி என்று புலம்பித் தள்ளியிருந்தது.

ஒரு பெண் தன்னை இந்தளவு இயல்புக்கு மாறான விசயங்களைச் செய்யத் தூண்டுவாளா என்ன?

முன்பு போல் பசிப்பதில்லை. உறக்கம் வருவதில்லை. அவ்வளவு ஏன்? வியாபாரத்தில்கூட கவனம் செலுத்த முடிவதில்லை. எத்தனையோ முறை, பேச வந்த விசயத்தை மறந்து அஸ்வினியையே நினைத்துக்கொண்டிருந்தான்.

அவளின் நாணமும், பதற்றமும் 'உன் மீது எனக்கும் காதல் இருக்கிறது' என்று சொல்வது போல்தான் இருந்தது.

'என்ன பெண் அவள்? கல்லூரியில் படிப்பவள்தானே? எத்தனை முறை என் மனதைக் கோடிட்டுக் காட்டியிருப்பேன்? ஒருமுறையாவது தொலைபேசியில் பேசியிருக்கிறாளா? அப்படியென்ன பாழாய்ப்போன வெட்கமோ? புரியவில்லை.

பரத்திற்கு லேசாய் சலிப்பு ஏற்பட்டது. என்றாலும் அன்று முழுக்க வேறெதிலும் வேலை ஓடவில்லை. அவளை உடனே பார்க்க வேண்டும் போல் மனசு துடித்தது. ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் அவளைப் பார்க்க முதன்முதலாய் கல்லூரிக்குச் சென்றான்.

**கா**ரை நிறுத்திவிட்டு உள்ளே வந்த கணவரைப் புன்னகை பூத்த முகத்துடன் எதிர்கொண்டாள், தனலட்சுமி.



சட்டையின் இரண்டு பொத்தான்களை கழற்றிவிட்டு, கைகளைப் பரப்பி சோபாவில் அமர்ந்தார், புருசோத்தமன்.

தண்ணீர் கொண்டுவந்த தனலட்சுமி, "சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா?" என்று கேட்டாள்.

"இல்லே... வேண்டாம் தனம். சாப்பிட்டு வந்திட்டேன்!"

"ஆபீசிலேர்ந்துதானே வர்றீங்க? அப்புறம் எப்படி சாப்பிட்டீங்க?"

"முருகவேல் தெரியுமா?"

"ஆமா. உங்களோட நண்பர். கப்பல் கம்பெனி நடத்துறவர் தானே?"

"அவரேதான்! திடீர்னு ஆபீசுக்கு வந்து முக்கியமான விசயம் பேசணும்னு தன் காரிலேயே அழைச்சிட்டு ஓட்டலுக்கு போயிட்டார்."

"ஓட்டல் சாப்பாடு உங்களுக்கு ஆகாதே!"

"அதை விடு! அதைவிட முக்கியமான விசயம் ஒண்ணு இருக்கு!"

"என்னங்க?"

"முருகவேலுக்கு ஜெயசூரியான்னு ஒரு மகன் இருக்கான், தெரியுமில்லையா?"

"ஆமாம்... வாட்டசாட்டமா அழகாயிருப்பான்!"

"அவன்தான் இவனோட எல்லா நிறுவனத்துக்கும் நிர்வாக இயக்குநர். நம்ம அமுதாவை ஏதோ விழாவுல பார்த்திருக்கானாம். ரொம்ப பிடிச்சிடுச்சாம். உங்க பொண்ணை எங்க வீட்டு மருமகளா ஆக்கிக்க விரும்புறோம்னு சொன்னார்!"

"அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?" என்றாள், பதற்றத்துடன்.

"எனக்குச் சம்மதம்தான். எதுக்கும் வீட்டுலே ஒரு வார்த்தை கேட்டுட்டுச் சொல்றேன்னு வந்துட்டேன்."

"அப்பாடா..." என்று நிம்மதியாய் மூச்சுவிட்டாள்.

"நம்மைவிட பெரிய இடம். நான் எதிர்பார்த்த மாதிரி சொத்துக்கு ஒரே வாரிசு. பையனும் அழகு. விசாரிச்ச வரையில் நல்ல பையன். அமுதாவுக்கு இந்த இடத்தையே முடிச்சிட்டா என்ன?"

"புரிஞ்சுதான் பேசுறீங்களா?"

"என்ன சொல்றே தனம்?"

"கையிலே வெண்ணெயை வச்சுக்கிட்டு ஏன் நெய்க்கு அலையறீங்க?"

"புரியலே!"

"அமுதாவுக்கு பரத்தான் மாப்பிள்ளைன்னு அவள் பிறந்தப்பவே நானும் எங்க அண்ணனும் முடிவு பண்ணின விசயம். அது உங்களுக்கே தெரியும். அப்படியிருந்தும் வெளியிலே மாப்பிள்ளை பார்க்கிறீங்கன்னா... என்ன அர்த்தம்? எங்க சொந்தக்காரங்கன்னாலே உங்களுக்கு இளக்காரம்தான்!" என்றாள், குரல் கம்ம.

"உன் புராணத்தைத் தொடங்கிட்டியா? இதோ பார்! உங்க அண்ணனைப் பற்றி உனக்கே தெரியும். அர்த்தராத்திரியிலே குடை பிடிக்கிற ஆணவக்காரர். திடீர் பணக்காரர். இப்ப நம்மைவிட அந்தஸ்துல ஒரு படி மேலே இருக்கிறவர். இருபது ஆண்டுக்கு முந்தி பேசினதை எல்லாம் காப்பாத்துற ரகமாயிருந்தா... கல்யாண விசயத்தைப் பற்றிப் பேசியிருக்க மாட்டாரா? அமுதாவைத் தன் வீட்டு மருமகளா ஆக்கிக்கணும்னு நினைச்சிருந்தா... நம்ம வீடு தேடிவந்து பேசியிருக்க மாட்டாரா?"

"எல்லாத்தையும் நீங்களே முடிவு பண்ணிட்டா சரியாயிடுமா? கல்யாண விசயமாய் எங்க அண்ணன் இன்னைக்குத்தான் போனில் பேசினார். அதை உங்ககிட்டே சொல்லணும்னு இருந்தேன். நீங்க என்னடான்னா... வந்ததும் உங்க நண்பர், பொண்ணு கேட்ட விசயத்தை சொல்லி நிலைகுலைய வச்சிட்டீங்க."



"உங்க அண்ணன் எப்ப பேசினார்?"

"ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடி!"

"ஏன்... அதை என்கிட்டே பேசியிருக்கலாமே!"

"முதல்ல உங்க ஆபீசுக்கு போன் பண்ணிட்டுதான்... அங்கே நீங்க இல்லேன்னதும் என்னிடம் பேசினார்!"

"செல்போனில் பேசியிருக்கலாமே!" என்றார் விடாப்பிடியாய்.

"அதான்... நண்பரோடு பேசும்போது தொந்தரவாய் இருக்கும்னு அணைச்சு வச்சிட்டீங்களே! நானே எத்தனை முறை முயற்சி பண்ணி ஓய்ஞ்சுபோனேன் தெரியுமா?"

"அட... ஆமாம்!" என்றபடி பையிலிருந்த செல்போனை எடுத்து உயிரூட்டினார்.

"எங்கண்ணனுக்கு நீங்க போன் பண்ணிப் பேசுங்க!"

"தனம்... நான் ஒண்ணு சொன்னா கேட்பியா?" என்றார் தயக்கமாய்.

"என்ன?" ஆர்வமாய் பார்த்தாள்.

"இந்த மாதிரி நெருங்கிய உறவுமுறைகளிலே கல்யாணம் பண்றது தப்புன்னு விஞ்ஞானம் சொல்லுது. பிறக்கிற குழந்தைகள் ஏதாவது குறைகளோட பிறக்க வாய்ப்பிருக்காம்."

"போதும்ங்க உங்க வியாக்கியானம். தொடக்கத்திலே இருந்தே எங்க பக்கத்து சொந்தம் உங்களுக்குப் பாகற்காய் தான். இதுவே உங்க அக்காவோ, தங்கையோ இருந்து அவங்களுக்கு பையனும் இருந்திருந்தா இப்படி விஞ்ஞானமா பேசிட்டிருப்பீங்க? இந்நேரம் அமுதாவுக்குக் கல்யாணத்தை முடிச்சிருக்க மாட்டீங்க? இங்கே பாருங்க... என் விருப்பத்துக்கு மாறாக முடிவு எடுத்தீங்கன்னா... என்னை உயிரோடவே பார்க்க மாட்டீங்க" என்றாள், அழுத்தமாய்.

"என்னது...?" அதிர்ந்தார்.

"அதுமட்டுமில்லே... அமுதாவும் பரத்தைத் தவிர வேறு

யாருக்கும் கழுத்தை நீட்டமாட்டா... அந்த அளவுக்கு பரத்தை நேசிக்கிறா..."

"த...ன...ம்..."

"இதுக்கும் மேலே பிடிவாதம் பிடிக்கிறது நல்லதா கெட்டதான்னு நீங்களே முடிவு பண்ணுங்க" தீர்க்கமாய்ச் சொல்லிவிட்டு, கோபமாய் உள்ளே சென்றாள்.

புருசோத்தமன் யோசனையில் ஆழ்ந்தார்.

**க**ல்லூரி வாசலில் நின்றிருந்த காரைப் பார்த்து இன்ப அதிர்ச்சியில் "அட கடவுளே!" என்று அலறிவிட்டாள், அமுதா.

"என்னாச்சு அமுதா?"

"அங்கே பார்!"

அவள் கை காட்டிய இடத்தில் காரில் இவளையே பார்த்தபடி பரத்.

அதைச் சற்றும் எதிர்பார்க்காத அஸ்வினியினுள் இன்ப வெள்ளம் ஊற்றெடுத்தது.

"அலோ பரத்! எங்கே இந்தப் பக்கம்?" என்றாள், அவனருகே ஓடி.

என்ன சொல்லுவது என்று ஒரு கணம் திணறினான்.

"சும்மாதான்... இந்தப் பக்கம் வந்தேன்... உன் நினைவு வந்தது... அப்படியே உன்னைப் பார்த்துட்டு போகலாம்னு தான்..." அவனின் பார்வை, அமுதாவின் பின்னால் நின்றிருந்த அஸ்வினியின் மேல் படிந்திருந்தது.

அஸ்வினிக்குப் புரிந்தும், புரியாதது போலிருந்தாள். அந்த வார்த்தைகள் அமுதாவினுள் 'சில்'லென சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

'என்மேல் பரத்திற்கு இவ்வளவு காதலா?' தலை கால் புரியவில்லை அமுதாவிற்கு.



# 4

**வ**ண்டியை வீட்டுக்கு விடாமல் கடற்கரையை நோக்கிச் செலுத்தினாள், அமுதா.

நெற்றியைச் சுருக்கினாள், அஸ்வினி.

"என்ன திசைமாறிப் போறே?"

"கடற்கரையில கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போகலாமே!"

"சரி" என்ற அஸ்வினிக்கும் மனசு நிறைந்திருந்ததால், கடற்கரைக் காற்றை அனுபவித்தபடி பரத்தின் நினைவுகளை அசை போட வேண்டும் போலிருந்தது.

வண்டியை நிறுத்திவிட்டு மணலில் கால்கள் புதைய நீலக்கடலை நோக்கி நடந்தனர்.

காற்றில் பட்டொளி வீசிப் பறந்த துப்பட்டாவின் இரண்டு முனைகளையும் சேர்த்து முடிபோட்டுக்கொண்டாள், அஸ்வினி. கழுத்தைச் சுற்றி 'மப்ளர்' மாதிரி போட்டாள், அமுதா.

சலிக்காமல், அலுக்காமல் கரையை முத்தமிட்டு முத்தமிட்டு, காற்றிற்குச் சிலிர்ப்பை ஏற்படுத்தும் அலைகளில் கால்களை நனைத்தனர்.


அமுதாவின் முகத்தில் இதுநாள்வரை இல்லாத பரவசம், இப்போது பரவியிருந்தது. சிறு குழந்தையைப் போல் கைகளில் தண்ணீரை அள்ளி வீசினாள்.

"ரொம்ப மகிழ்ச்சியா இருக்கியா அமுதா?"

"உம்... ரொம்ப ரொம்ப!"

"ஏன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

முகத்தில் வெட்கம் கலந்த புன்னகை வெளிப்பட, அஸ்வினியை நோக்கியவள், புருவம் உயர்த்தினாள்.



“உன் முகத்திலும்தான் ஒரு மாற்றம் தெரியுது. கன்னமெல்லாம் சிவந்திருக்கு!”

“அது... அதெல்லாம் ஒண்ணுமில்லே. ஜாலியா இருக்கிறதால அப்படித் தெரியுது!” என்று சமாளித்தாள்.

‘பின்னே, உண்மையைக் கூறமுடியுமா? உன் முறை மாப்பிள்ளை என்னை நேசிக்கிறார் என்று! ஆனாலும், இந்த எதிர்பார்ப்பு உண்மையாக இருக்க வேண்டும்!’ அஸ்வினியின் காதல் மனசு ஏங்கியது.

“அப்படியா?” என்றாள், அமுதா.

“சொல்லு அமுதா!”

“பரத் பற்றி நீ என்ன நினைக்கிறே?”

அஸ்வினி, அந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை.

“இதே கேள்வியை நீ ஏற்கனவே கேட்டாச்சு அமுதா!”

“இப்ப மறுபடியும் கேட்கிறேன்....சொல்லு!”

“அதே பதிலைச் சொல்றேன்... நாகரிக இளைஞர்!”

“இன்னைக்கு திடீர்னு பரத் நம்ம கல்லூரிக்கு வந்தாரே... ஏன்னு தெரியுமா?”

“தெ... தெரியாது...”

“எனக்குத் தெரியும்.”

“என்ன சொல்லு!”

“ஊகூம்... அது ரகசியம்!”

“இந்த அலட்டல்தானே வேண்டாங்கிறது!”

“எல்லா விசயத்தையும் சொல்லிட்டா மர்மம்கிற வார்த்தைக்கே மதிப்பில்லாமப்போயிடுமே!”

“என்னடி... என்கிட்டேயே மறைக்கிறியா?”

“உன்கிட்டே மறைப்பேனா? ஆனா, கொஞ்ச நாளைக்கு விளையாட்டு காட்டிட்டு சொல்லுவேன். ஆனா, அந்த விசயம் தெரிஞ்சா நீ ரொம்ப ஆனந்தப்படுவே!”

"என்னன்னு ஒரு குறிப்பாவது கொடுக்கலாமில்லே?"

"சரி... உனக்காக ஒரு குறிப்பு தர்றேன். விசயம் பரத்தைப் பற்றி!"

"பரத்?"

"ஆமாம்! இன்னைக்கு திடீர்னு கல்லூரிக்கு ஏன் வந்தார் தெரியுமா?"

"ஏன்?" இதயம் படபடத்தது.

"தன் காதலியைப் பார்க்க!"

"கா... காதலியா?"

"ஆமாம்... அவர் பார்வையே சரியில்லே. இது நாள் வரைக்கும் மனுசன் மனசுக்குள்ளே கமுக்கமா வச்சிருந்திருக்கிறார். இப்பதான் தைரியம் வந்திருக்கு."

'கடவுளே... இவளுக்கு விசயம் தெரிந்துவிட்டதா?' கடற்காற்றையும் மீறி வியர்த்தது.

"யார் அவள்?"

"நீயும் நல்லா நடிக்கிறே அஸ்வினி."

"நடிக்கிறேனா?"

"ஆமா! அவள் யாருன்னு உனக்கு நல்லாவே தெரியும். ஆனாலும் தெரியாத மாதிரி கேட்கிறே! பரவாயில்லே... இந்த விளையாட்டுகூட நல்லாவே இருக்கு. கிளம்பலாமா? இருட்டிப்போச்சு!" என்றாள், அவளையே குறுகுறுவெனப் பார்த்தபடி.

அந்தப் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் தலை கவிழ்ந்தாள், அஸ்வினி.

'பரத் என்னைக் காதல் ததும்பப் பார்த்ததை இவள் கவனித்திருக்கிறாள். அதுதான் பொடி வைத்துப் பேசுகிறாள்!

**மா**டியில் நின்றிருந்த பரத், தோட்டத்தில் பல வண்ணங்களில் விதவிதமாய் இதழ்விரித்துச் சிரித்த மலர்களை



ரசித்துக்கொண்டிருந்தான்.

இளமாலை வெயில், அந்தச் சூழ்நிலையை ரம்மியமாக்கிக் கொண்டிருந்தது. தோட்டக்காரன், செடிகளுக்கு நீர் ஊற்றினான். இலைகளை முத்தமிட்ட நீர்த்துளிகள், வெயில் பட்டு தகதகவெனத் தங்கமாய் மின்னின.

"பரத்!" குரல் கேட்டுத் திரும்பினான்.

அவன் பெற்றோர் சத்தியமுத்துவும், வாசுகியும் அவனை நோக்கி வந்தனர்.

"இங்கே என்னப்பா பண்ணிக்கிட்டிருக்கே?"

"சும்மாதான் நின்னுட்டிருக்கேன்!"

"வியாபாரம் ஷியாபாரம்னு அரக்கப் பரக்க ஓடிக்கிட்டிருப்பே... இன்னைக்கென்னவோ அதிசயமா வீட்டுக்குச் சீக்கிரமா வந்துட்டே?" அப்பா கேட்டார்.

"ஆமாம்ப்பா!"

"ஏதாவது போன் வந்து மறுபடியும் அவன் வெளியே கிளம்புறதுக்குள்ளே பேச வந்த விசயத்தைப் பேசிடுங்க" என்றாள், வாசுகி.

"அதுவும் சரிதான்!"

"என்னம்மா? ஏதாவது முக்கியமான விசயமா?"

"ஆமா... உன்னோட கல்யாண விசயம்தான்!"

"கல்யாணமா?" திடுக்கிட்டான்.

"நீ சும்மா இரு! நான் பேசுறேன். பரத், இன்னைக்கு உன்னோட மாமாவும் அத்தையும் வந்திருந்தாங்க. அமுதாவுக்கும், உனக்கும் கல்யாணம் பண்ணணும்னு. அது பல ஆண்டுக்கு முன்னாலேயே பேசி எடுத்த முடிவு."

"........."

"நான் சம்பாதிச்சது ஒரு பக்கம், நீ சம்பாதிச்சது ஒரு பக்கம்னு நிறையவே சேர்த்தாச்சு. சொத்து வெளியிலே

போகவேணாம். ஒண்ணுக்குள்ளே ஒண்ணா நம்ம சொந்தத் துக்குள்ளேயே இருக்கட்டும். அமுதா தேவதை மாதிரியிருக்கா. அவளும் உன்னைத்தான் கட்டுவேன்னு ஒத்தைக்கால்ல நிக்கிறாளாம்..."

"........."

"உன்னைக் கட்டிக்க அவள் கொடுத்து வச்சிருக்கணும்கிறது ஒருபக்கமிருக்கட்டும். அவளைக் கட்டிக்க நீயும் அதிருஷ்டம் பண்ணி இருக்கணும்! உன்னை ஒரு வார்த்தை கேட்டுட்டு நிச்சயதார்த்தத்துக்கு நாள் குறிக்கலாம்னு இருக்கேன்!"

அப்பா பேசிக்கொண்டே போக... திகைப்பின் உச்சத்திலிருந்தான், பரத்.

அவன் கண் முன்னே அஸ்வினியின் பூ முகம் வந்து போனது.

"இ... இப்ப அதுக்கு என்ன அவசரம்ப்பா? கொஞ்ச நாள் போகட்டுமே!"

"கொஞ்ச நாள்னா எவ்வளவு? பத்துப் பதினஞ்சு நாளா?"

"அதில்லேப்பா..."

"உடனே கல்யாணம்னு சொல்லலியே? நிச்சயம்தானே? அப்புறம் என்ன பரத்?"

"இப்ப புது வியாபார யோசனையில இருக்கேன். ஒரு மாசம் கழிச்சு இதைப்பற்றிப் பேசுவோமே" என்றான் அழுத்தமாக.

ஒரே வாரத்தில் ரொம்ப தளர்ந்துபோயிருந்தார், சேதுராமன். அன்றுதான், சிகிச்சை முடிந்து மருத்துவ மனையிலிருந்து வீட்டிற்கு வந்திருந்தார்.

வேறொன்றுமில்லை! எப்போதும் போல் அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பியவர், மனைவி கொடுத்த காப்பியைப் பருகும்போது திடீரென்று நெஞ்சுவலியால் சாய்ந்துவிட்டார்.

அலறியடித்தபடி அக்கம்பக்கத்து வீட்டார் உதவியுடன் அவரை மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றாள், செண்பகம்.



முதல்முறைதான். ஆனால், கடுமையாக வலி வந்திருந்ததால் தீவிர கண்காணிப்பில் அனுமதிக்கப்பட்டு, எப்படியோ உயிர் பிழைத்துவிட்டார். மறுபடியும் வந்தால் உயிர் பிழைப்பது கடினம் என்று மருத்துவர்கள் எச்சரித்தே அனுப்பியிருந்தனர்.

மகள்கள் இருவரும் ரொம்பவே பயந்துவிட்டிருந்தனர்.

அப்பாவின் உடல்நிலை பரவாயில்லை என்று மருத்துவர் கூறியபிறகே கல்லூரிக்குச் சென்றாள், அஸ்வினி.

அன்று வகுப்பு முடிந்து வீடு திரும்பியவள், முன்பின் பார்த்திராத ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர், தங்கள் வீட்டிலிருந்து வெளியே செல்வதைப் பார்த்தாள்.

யோசனையுடன் முகம் கழுவி, காப்பி தம்ளருடன் அப்பாவின் அருகே அமர்ந்தாள்.

"இப்ப உடம்பு பரவாயில்லையாப்பா?"

"ஏம்மா பயப்படுறே? அப்பாவுக்கு ஒண்ணுமில்லேடா... நல்லாதான் இருக்கேன்!"

"திடீர்னு அப்படி ஆயிட்டதும் நாங்க எல்லாரும் ரொம்ப பயந்துட்டோம்ப்பா!"

"உங்களை எல்லாம் கரைசேர்க்காம, கடமையை முடிக்காம நான் போயிடமாட்டேன், அஸ்வினி!"

"இப்படியெல்லாம் பேசாதீங்கப்பா... நீங்க நூறு ஆண்டு இருக்கப்போறீங்க."

"அவ்வளவு பேராசை எனக்கில்லைம்மா!"

"அப்பா... இப்ப நான் வரும்போது ஒருத்தர் வெளியே போனாரே, அவர் யார்? இதுவரை அவரை நான் பார்த்ததேயில்லையே?"

"ஓ... ஏகாம்பரத்தைச் சொல்றியா? அவர் தரகரும்மா."

"தரகரா? அவர் ஏன் நம்ம வீட்டுக்கு வந்தார்?"

"கல்யாண வயசுல நீ இருக்கியேம்மா! என்ன புரியலியா? உனக்கு நல்ல வரன் பார்க்கச் சொல்லி உன் ஜாதகத்தைக்

அஸ்விவிக்குத் தூக்கிவாரிப்போட்டது. "அப்பா... என்னப்பா இது? என் கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம்?"

"அவசரம்தாம்மா! இப்ப என் உடம்பு இருக்கிற நிலையிலே. எதையும் நம்பமுடியலே. உங்கம்மா ஒரு வெகுளி. வீட்டுப் பறவை. ஒண்ணுந்தெரியாது. திடீர்னு நான் உங்களையெல்லாம் விட்டுட்டுப்போயிட்டா... அவளால கட்டிக் காப்பாத்த முடியாது."

"அப்பா... ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க?"

"எல்லாத்தையும் யோசிக்கணுமேம்மா! பெத்தவன் இல்லையா? உனக்கடுத்து செல்வி இருக்கா. அவளையும் ஒருத்தன் கையிலே ஒப்படைக்கணும். உன்னைப் புகுந்த வீட்டுக்கு அனுப்பிட்டு அவளுக்கும் வரன் பார்க்கணும். எல்லாக் கடமையும் முடிச்சிட்டேன்னா நிம்மதியா இருக்கும். ஒரு வாரத்திலே நல்ல வரன்களோட வர்றேன்னு சொன்னார் தரகர்."

அப்பா பேசிக்கொண்டே போக, அஸ்வினிக்கு கண்ணீர் கொப்பளித்தது.

அந்தக் கண்ணீரில் பரத்தின் முகம், கலங்கலாய் வந்து இம்சித்தது.

## 5

**க**ண்ணீர், தலையணையை நனைக்க, சத்தம் வராமல் அழுதாள், அஸ்வினி.

'இப்போது நான் என்ன செய்யப்போறேன்? அப்பா எனக்கு மாப்பிள்ளை பார்க்கிறார். அவருடைய உடல் நிலை அவருக்கு



பயத்தை உண்டாக்கிவிட்டது. என்ன காரணத்தைச் சொல்லித் தடுத்தாலும் கேட்கும் நிலையில் அப்பா இல்லை. அவர் நிலையில் யார் இருந்தாலும் இதைத்தான் செய்வார்கள். எப்படியும் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்பதில் அம்மாவும் அப்பாவும் தீவிரமாய் இருக்கிறார்கள்.'

'அப்படியானால் பரத்? மனசுக்குள் காதலால் அரித்துக் கொண்டிருக்கிற அவரை எப்படி மறக்க முடியும்? அவரைச் சந்தித்துப் பேசலாமா? என்னவென்று பேசுவது?'

'வீட்டில் வரன் பார்க்கிறார்கள் என்று கூறலாமா? 'பார்க்கட்டுமே... அதற்கென்ன?' என்று பதில் கூறிவிட்டால்? சே... நான் ஏன் எதிர்மறையாகவே யோசிக்கிறேன்? அவர் என்னைப் பார்த்த பார்வையிலேயே காதல் தெரிந்ததே!'

'சிலர் சாதாரணமாகப் பார்ப்பதே காதல் ததும்பத்தான் இருக்கும். அதைக் காதல் என்று எடுத்துக்கொள்ள முடியாதே! அப்படி பரத் என்னைக் காதலித்தால் தைரியமாய் 'ஐ லவ் யூ' என்று கூறியிருப்பாரே!'

'மண்டு! நீ அழகாயிருக்கிற ஒரே காரணத்திற்காக ஒரு கோடீஸ்வரன் காதலித்து விடுவானா? அதெல்லாம் சினிமாவுக்குத்தான் ஒத்துவரும். அவன் நினைத்தால் பேரழகியாய் மனைவியைத் தேர்வு செய்வானே?'

'அவ்வளவு ஏன்? என்னைவிட அமுதா அழகிதான். பணக்காரப் பெண். சொந்த அத்தைப் பெண். அவளை விட்டுவிட்டு என்னைக் காதலிப்பானா என்ன? இது என் அதீத கற்பனையோ? என்னைப் போன்ற நடுத்தரக் குடும்பத்து இளம் பெண்கள், ராஜகுமாரன் குதிரையில் வந்து தன்னைக் கவர்ந்து சென்று மணமுடிப்பான் என்று காணும் அதே கனவை நானும் காண்கிறேனோ?'

'இல்லை... பரத் உன்னை நேசிக்கிறார் என்று இதய மூலையில் ஏதோ ஒரு குரல் ஒலித்துக்கொண்டே இருக்கிறதே... ஏன்?'

ஒரே பெண்ணின் மனதை இன்னொரு பெண்தான்

அறிவாள். அதிலும் அமுதா என் உயிர்த்தோழி. என் மனதைப் பற்றி அவளைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்? பரத் அன்று கல்லூரிக்கே பார்க்க வந்ததை புரிந்துகொண்டவளாயிற்றே? அவளிடம் சொன்னால்... ஏதாவது ஆலோசனை கூறுவாள். பரத்திடம் பேசுவாள். ஆனால், அவள் இப்போது இங்கில்லையே!

ஏதோ வேண்டுதல் என்று கூறிக் குடும்பத்துடன் ஆலய தரிசனம் செய்யப் புறப்பட்டுப் போய் பத்து நாள் ஆகிறது. திரும்பி வர இன்னும் ஒரு வாரமாகும்.

'வந்து... உன்னிடம் ஒரு விசயம் சொல்லணும். மர்மமாய் இருக்கட்டும் என்றுதான் சொல்லாமல் மறைத்தேன். தெரிந்தால் ரொம்ப ஆனந்தப்படுவாய்' என்று கூறிவிட்டுச் சென்றவள், இன்னும் வரவில்லை. அவள் இருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். ஒரு வழியும் புலப்படவில்லையே! என்ன செய்யப் போகிறேன்?'

அந்தப் பேதையின் நெஞ்சம் அரற்றிக்கொண்டே இருந்தது.

சென்னையின் நவீன மருத்துவமனை.

ஆபரேஷன் தியேட்டர் வாசலில் நிலைகொள்ளாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார், தயாளன்.

என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்கிற பதற்றத்திலேயே உடல் முழுக்க வியர்த்து வழிந்தது.

நகரத்தின் மிக முக்கியப் புள்ளி; ஐந்து ஆண்டுக்கு முன் கார் விபத்தில் தன் மனைவியையும் மூத்த மகன் மகேந்திரனையும் பறிகொடுத்தவர்.

இப்போது மறுபடியும் விபத்து, இளைய மகன் கோபி. எல்லா விசயத்திலும் வேகம். எண்பதுக்குக் குறையாமல்தான் கார் ஓட்டுவான். தயாளன் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டார்.

கேட்டால்தானே?

அவர் பயந்ததுபோல்தான் நடந்துவிட்டது.



லாரி மீது கார் மோதி, அப்பளமாய் நொறுங்கி... கண்ணாடி சில்லுகள் மார்பிலும், வயிற்றிலும், இடுப்பிலுமாய்க் குத்திக் கிழித்து... அதற்கான அறுவை சிகிச்சைதான் நடந்து கொண்டிருந்தது.

தயாளனுக்கு இதயம் பலகீனமாய் இருந்தது. அதனால் ஓராண்டுக்கு முன்பே கம்பெனி பொறுப்புகளைக் கோபியிடம் ஒப்படைத்துவிட்டார். முன்பைவிட உடம்பு ரொம்பவே தளர்ந்துவிட்டிருந்தது.

அலுவலக மேலாளர் சித்தரஞ்சன்தான் அவரைத் தேற்றினார்.

"ஒண்ணும் ஆகாது சார்... கவலைப்படாதீங்க..."

"எப்படி சித்தரஞ்சன்? எப்படி கவலைப்படாம இருக்க முடியும்? என் மனைவியையும், பெரிய மகனையும் விபத்திலே பறிகொடுத்திட்டேன். எங்கே கோபியையும் பறிகொடுத்திடுவேனோன்னு பயமாயிருக்கு!"

"அப்படியெல்லாம் எதுவும் ஆகாது சார்! தலையிலே அடிபட்டிருந்தாதான் பிரச்சினையே! கடவுள் புண்ணியத்திலே தலையிலே அடிபடலே. வயித்திலேதான் கண்ணாடி சில்லுகள் நிறைய குத்திக் கிழிச்சிருக்குன்னு சொன்னாங்க... அதை எல்லாம் அப்புறப்படுத்தத்தான் ஆபரேஷன் நடக்குது. மத்தபடி எந்த ஆபத்தும் இல்லேன்னு டாக்டர் சொல்லிட்டார். ரத்தம் நிறைய வெளியேறிடுச்சு. தேவையான ரத்தத்துக்கும் ஏற்பாடு பண்ணியாச்சு. நீங்க கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக்காதீங்க..." பரிவாய், ஆறுதலாய் அவர் சொன்ன வார்த்தைகள், தயாளனை ஓரளவு ஆசுவாசப்படுத்தின.

இருக்கையில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடிக்கொண்டு இஷ்ட தெய்வங்களை எல்லாம் வணங்கினார்.

மேலும் ஒரு மணி நேரம் கடந்தது.

ஆபரேஷன் தியேட்டர் கதவு திறந்தது

களைத்த முகத்துடன் மருத்துவர்கள் ஒருவர்பின் ஒருவராக வெளியே வர...

தயாளன், ஆர்வமுடன் அவர்களை நோக்கி வந்தார்.

"டாக்டர்... என் மகன்..."

"ஆபரேஷன் வெற்றிகரமா முடிஞ்சிடுச்சு. கவலைப் படாதீங்க தயாளன்!" தலைமை மருத்துவர் சீனிவாசன் அவர் தோளில் ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தார்.

"நன்றி டாக்டர்... ரொம்ப நன்றி! என் பிள்ளையை நான் பார்க்கலாமா?" அவர் முகத்தில் நிம்மதி படர்ந்தது.

மருத்துவர் வெங்கட் அவர் அருகில் வந்தார்.

வெங்கட், கோபியின் கல்லூரித் தோழர் என்பதால் தயாளனுக்கு நன்கு பரிச்சயம்.

"இல்ல... இல்ல சார்! கோபிக்கு நினைவு திரும்ப இரண்டு மணி நேரமாகும். அதுவரைக்கும் பார்க்க அனுமதியில்லை. அதுவரை காத்திருங்க..."

தயாளன் பதில் கூறாமல் மவுனமானார்.

சீனிவாசன் வெங்கட்டைப் பார்த்துக் கண்களால் சமிஞ்ஞை செய்தார்.

புரிந்துகொண்டவராய் மெல்ல தலையசைத்தார், வெங்கட்.

சீனிவாசன், தன் அறையை நோக்கி நடந்தார்.

வெங்கட், தயாளனின் தோளில் கை வைத்தார்.

"சார்!"

"என்னப்பா?"

"தலைமை டாக்டர் உங்ககிட்டே ஒரு முக்கியமான விசயம் பேசணும்னு சொன்னார். வாங்க!"

"எ...என்ன விசயம்?" சட்டென அவரின் முகம் கலவரத்திற்கு மாறியது.

"நீங்க பயப்படுறமாதிரி எதுவுமில்லே... இனிமேல் கோபிக்கு எந்த மாதிரி சிகிச்சை தரணும்னு பேசுறதுக்குதான்!"

"ஒரு நிமிசத்திலே பயந்துட்டேன், வெங்கட். வாப்பா போகலாம். சித்தரஞ்சன் நீங்களும் வாங்க!"



"அவர் அவசியமில்லே... நீங்க மட்டும் வந்தா போதும்!" தயாளன் ஒருமாதிரி பார்த்தபடி பின்தொடர்ந்தார்.

"உக்காருங்க தயாளன்..." என்ற சீனிவாசன், சிறிது நேர தயக்கத்திற்குப் பின் பேசினார்.

அவர் கூறியவற்றைக் கேட்டுத் துடிதுடித்தார், தயாளன்.

அரை மணி நேரம் ஓடியது.

மனம் கனக்க, கண்களை மூடி தலைகவிழ்ந்து அமர்ந்திருந்தார், தயாளன்.

வெங்கட் ஆறுதலாய் அவர் கையைப் பற்றினார்.

"நீங்களே இப்படி உடைஞ்சு போயிட்டா எப்படி சார்? அப்புறம் கோபிக்கு எப்படி ஆறுதல் சொல்லுவீங்க?"

"கோபிக்கு ஆறுதல் சொல்றதா? ஐயோ... என்னால அது முடியாது. விசயம் இப்படிப்பட்டதுன்னு தெரிஞ்சா உயிரையே விட்ருவானே? நீங்க சொன்னது தாங்கிக்க கூடிய விசயமா? வெங்கட்... என் குடும்பத்தில் மட்டும் அடுக்கடுக்கா ஏனிந்தச் சோதனை?" அவர் முதுகு குலுங்கியது.

"தயவுசெஞ்சு அழாதீங்க! நடக்க வேண்டியதைப் பாருங்க" என்றார், சீனிவாசன்.

"உங்களால முடியலேன்னா... நான் கோபிகிட்டே இதமா இந்த விசயத்தைச் சொல்லட்டுமா?"

"வேணாம் வெங்கட்... அவனுக்கு இந்த விசயமே தெரியக்கூடாது!"

"இல்லே சார்! கோபிக்கு இந்த விசயம் தெரியுறது நல்லதுன்னு நினைக்கிறேன்."

"எப்படி வெங்கட்? தாங்கிக்கிற விசயமா இது? வேணாம். என் பிள்ளைக்கு இது தெரியவேகூடாது."

"பிறகெப்படி?"

"என் பிள்ளையோட மகிழ்ச்சிதான் எனக்கு முக்கியம். அவனுக்காகத்தான் நான் வாழுறேன். எனக்குள்ளே அவனைப் பற்றி நிறைய கனவுகள் இருக்கு. நாலு பேரைப் போல அவனும்

கல்யாணம் பண்ணிக்கிட்டு..."

"இந்த நிலைமையிலே கோபிக்குக் கல்யாணமா?" வெங்கட் முகம் அதிர்ச்சியாய் மாறியது.

"புரியுது. ஒரு பொண்ணோட வாழ்க்கையிலே விளையாடணுமான்னு கேட்கப் போறே! அப்படித்தானே? ஆமாம். விளையாடத்தான் போறேன். என் பிள்ளையோட வாழ்க்கையிலே அந்தக் கடவுள் விளையாடலே? என் வம்சமே இல்லாம போகப்போகுதே... அதைவிடவா இது பெரிசு? இருக்கிறவரைக்கும் கோபி ஆனந்தமா இருந்துட்டுப் போகட்டுமே!"

"எத்தனை நாளைக்கு மறைக்க முடியும் சார்? கோபி, வேறு டாக்டரைப் பார்த்தால் உண்மை தெரிஞ்சிடுமே..."

"அதைப் பிறகு பார்த்துக்கலாம். நான் சமாளிச்சுக்கிறேன். ஆனா, தயவு செய்து இந்த விசயத்தைக் கோபிக்கோ, மத்தவங்களுக்கோ தெரியாம பார்த்துக்கிறது..."

"எங்க பொறுப்பு! கவலைப்படாம போய்வாங்க சார்! டாக்டர் தொழிலுங்கிறது கத்தியை எடுத்துச் சதையை அறுத்துக் கூறு போடறதுதான். அதனால மனிதாபிமானம் இல்லாம போயிடாது. உங்க உணர்வுகளைப் புரிஞ்சு மதிப்பளிக்கிற மனுசங்கதான் நாங்களும்!" என்றார், சீனிவாசன்.

"நன்றி டாக்டர்!" நெடியதொரு பெருமூச்சுடன் எழுந்தார், தயாளன்.

## 6

கோபி, தேறி எழுந்து நடமாடினான்.

மகனைப் பார்க்கும் போதெல்லாம் நெஞ்சு, பாறாங் கல்லாய்க் கனத்தது. என்றாலும் அவன் எதிரே தன்



வேதனையை வெளிக்காட்டிக்கொள்ளாமல் நடந்தார், தந்தை தயாளன்.

"நாளையிலேருந்து நான் ஆபீசுக்குப் போகலாம்னு இருக்கேன்ப்பா!" என்றான், கோபி.

வேலைக்காரி கொண்டுவந்த ஆப்பிள் பழச்சாற்றை வாங்கி மகனிடம் கொடுத்தவர், "ஏன் கோபி? அதற்கு என்ன அவசரம்? இன்னும் ஒரு மாசம் போகட்டுமே!"

"இல்லப்பா! வீட்லே ரொம்ப போரடிக்குது. மூணு மாசம் படுக்கை வாசம். இதுக்கு மேலேயும் தாங்காது. இப்ப நான் ரொம்ப நல்லாயிருக்கேன்... பாவம், நீங்கதான் சோர்வாயிட்டீங்க... அம்மா இருந்திருந்தால்கூட உங்க அளவுக்கு என்னைக் கவனிச்சிருப்பாங்களாங்கிறது சந்தேகம்தான்! நீங்களும் இதய நோயாளி... உங்களுக்கும் ஓய்வு தேவை!"

"நான் உனக்காகத்தானே வாழ்ந்துக்கிட்டிருக்கேன், கோபி. உனக்கு ஒண்ணுன்னா என்னால தாங்கிக்க முடியாதுப்பா!" தழுதழுத்தார்.

"நான்தான் நல்லாயிட்டேனேப்பா... ஏன் கவலைப் படுறீங்க...!" என்றான், இதமான குரலில்.

"கோபி!"

"என்னப்பா...?"

"உன்னைப் பக்கத்திலே இருந்து கவனிச்சுக்க ஒரு பொண்ணு அவசியம்!"

"நர்சு நியமிக்கப் போறீங்களா? எனக்கு ஒண்ணும் இல்லப்பா!"

"நான் நர்சைச் சொல்லலே!"

"பின்னே...?"

"உனக்கொரு மனைவியை!"

"என்னப்பா சொல்றீங்க...?"

"ஆமாம் கோபி... இப்ப உனக்கொரு துணை அவசியம்.

இந்தக் குடும்பத்துக்கு ஒரு மகாலட்சுமி வேணும். நம்மளை மாதிரி வசதியான வீட்டுப் பொண்ணுங்க தொட்டதுக் கெல்லாம் வேலைக்காரங்களை வச்சுக்கிட்டு கணவனோட அன்பை முழுசா அனுபவிக்கத் தெரியாம நடந்துக்கிறாங்க... அதனால, ஒரு ஏழைப் பொண்ணுதான் உனக்கு மனைவியா வரணும்னு ஆசைப்படுறேன். தரகர்கிட்டேயும் பொண்ணு பார்க்கச் சொல்லிட்டேன். நீ என்ன சொல்றே கோபி?"

"உங்களை மீறி நான் எந்த முடிவும் எடுக்கமாட்டேன்ப்பா! என் கல்யாணம் உங்க விருப்பப்படி நடக்கணும்னுதான் காதல், கத்திரிக்காய்னு எதிலும் மாட்டாம இருக்கேன். ஆனா, ஏழைப் பொண்ணுதான் மருமகளா வரணும்னு ஆசைப்படுறீங்களே... உங்களுக்குப் பெரிய மனசுப்பா!"

"அவகிட்டேதான்ப்பா... அன்பு நிறைய இருக்கும். பிரச்சினை அது இதுன்னு வந்தால்கூட வாயைத் திறக்கமாட்டா!"

"என்ன பிரச்சினை வரும்?"

"அ..அது... ஒண்ணுமில்லே... சும்மா பேச்சுக்குச் சொன்னேன்!" சமாளித்தார்.

தரகர் பணிவாய்ச் சில படங்களை நீட்ட, வாங்கிப் பார்த்தார், தயாளன். பக்கத்தில் கோபியும் அமர்ந்திருந்தான்.

"நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்கக்கூடாது. மாப்பிள்ளையோட படத்தைப் பார்த்ததும் ஏகப்பட்ட பணக்காரவீட்டு வரனெல்லாம், 'இங்கேயே முடிச்சிருப் பான்னு போட்டி போடுறாங்க. ஆனா, ஏழைப் பொண்ணு தான் வேணுமின்னு நீங்க பிடிவாதமா இருக்கிறதுதான் ஆச்சரியமாயிருக்கு!"

"இதிலென்ன ஆச்சரியம்? பணக்கார சம்பந்தம்தான் வேணும்னா உன் உதவியே. எனக்குத் தேவையில்லை. ஒரு போன் பண்ணினாலே போதும். என் வட்டாரத்துல ஏகப்பட்ட வரன் இருக்கும். பணம் என்கிட்டே நிறைய



இருக்கு. அடக்கமா, பணிவா ஒரு ஏழைப் பெண் என் மருமகளா வரணும்னு நினைக்கிறதுல என்ன தப்பு? அட... இந்தப் பொண்ணு நல்லாயிருக்கே?" படங்களை பார்த்துக் கொண்டே பேசியவரின் முகம், அந்தப் படத்தைப் பார்த்ததும் பிரகாசமானது.

"கோபி, இந்தப் படத்தைப் பார்... பிடிச்சிருக்கா...?"

வாங்கிப் பார்த்தவனுக்கு பார்த்ததுமே பிடித்துப்போனது.

"பிடிச்சிருக்குப்பா!"

"அப்ப சரி, தரகரே... இந்தப் பொண்ணோட குடும்பத்தைப் பத்தி...!"

"பேரு அஸ்வினிங்க... படிச்சுக்கிட்டிருக்கு..." என்று விளக்கமாய்ச் சொன்னார்.

தயாளனுக்கு அவர் சொன்ன தகவல் திருப்தியாய் இருந்தது.

"இந்த இடத்தையே முடிச்சிடு!"

கல்லூரிக்குக் கிளம்ப ஆயத்தமாகிக்கொண்டிருந்த அஸ்வினியிடம் வந்தாள், செண்பகம்.

மகளின் முகத்தை திருஷ்டி கழித்து சொடக்கிட்டாள்.

"என்னம்மா?" ஆச்சரியமாய் பார்த்தாள், அஸ்வினி.

"போன பிறவியில் நீ பெரிய புண்ணியம் பண்ணி இருக்கே... இல்லேன்னா வீடு தேடி ராஜ வாழ்க்கை வருமா?"

"என்ன சொல்றே நீ?"

"ஒரு பொண்ணுக்கு நல்ல வாழ்க்கை அமையுறது சாதாரண விசயமா? குமாஸ்தா வேலை செய்யுற வரன்கூட ஆயிரத்தெட்டு நிபந்தனை போட்டு, இல்லாத அலம்பல் பண்ணி, அது இதுன்னு கேட்டு பொண்ணைப் பெத்தவங் களை மொட்டை அடிக்கிற இந்தக் காலத்துல... பெரிய பணக்கார வீட்டுச் சம்பந்தம் வீடு தேடிவருதுன்னா சும்மாவா?" என்றபடி தயாளனின் பெருமையை, கோபியின்

அழகை, குணத்தை வர்ணித்தாள், செண்பகம்.

அஸ்வினிக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது.

"படத்தைப் பாருடி! நடிகர் விக்ரம் மாதிரியில்லே? உங்கப்பாவுக்கு ரொம்ப பிடிச்சுப்போச்சு. அவர் கால் தரையிலே படலே" அளவுக்குமீறிய மகிழ்ச்சியில் செண்பகம் பேசிக்கொண்டே போக...

தத்தளித்தாள், அஸ்வினி.

அந்தப் படத்தை ஏறிட்டுப் பார்க்கக்கூட அவளால் முடியவில்லை. அம்மாவிடம் என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் தடுமாறினாள்.

'கல்யாணத்திற்கு இப்ப என்ன அவசரம்?' என்று கேட்டுத் தள்ளிவைக்க முடியாது.

சூழ்நிலை அப்படி!

முடிவுசெய்துவிட்டார்கள். மாறுவது...மாற்றுவது கடினம். ஆனால், என்னால் பரத்தை மறக்கமுடியாதே! அவருடன் கற்பனையில் நடத்திய வாழ்க்கையெல்லாம் கானல் நீர்தானா? இந்த மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லை என்று தவிர்த்தாலும், வீட்டார் விடப்போவதில்லை. கற்பனையில் கூட நினைத்துப் பார்க்கமுடியாத பெரிய இடத்துச் சம்பந்தம். என்னைக் கட்டிப்போட்டாவது கல்யாணம் பண்ணி வைத்துவிடுவார்கள்.

தயாளன்– பிரபலமான தொழிலதிபர்.

'அவ்வளவு பெரிய மனிதர், ஒரு மூலையில் மாதச் சம்பளக்காரருக்கு மகளாய்ப் பிறந்து, கணக்குப் போட்டுக் குடும்பம் நடத்தும் சாதாரண வீட்டில் பிறந்த என்னை, ஏன் தன் மாளிகைக்கு மருமகளாய்த் தேர்வு செய்தார்?'

அஸ்வினிக்குப் புரியவில்லை.

"மாமி..." என்றபடி மான்குட்டியாய் ஓடிவந்தாள், அமுதா.

"வாம்மா அமுதா."



"என்ன மாமி, ரொம்ப மகிழ்ச்சியா இருக்கீங்க போல..."

"ஆமாம்மா... கடவுள் எங்களை ஒருபக்கம் சோதிச்சாலும், இன்னொரு பக்கம் நல்லது பண்றார். அஸ்வினிக்குக் கல்யாணம் முடிவாயிடுச்சும்மா. மாப்பிள்ளை ரொம்ப பெரிய இடம்."

"உண்மையாவா சொல்றீங்க?" உற்சாக மிகுதியில் துள்ளிக் குதித்தாள்.

"ஆமாம்மா. இதுதான் மாப்பிள்ளையோட படம்! பேரு கோபி!"

"காட்டுங்க!" ஆர்வமாய் வாங்கிப் பார்த்தவள், அசந்து போனாள்.

"வாவ்! சூப்பர்! மாப்பிள்ளை வெளியூரா? உள்ளூரா?"

"இதே ஊர்தான்!"

"ஓ... ரொம்ப நல்லது!" என்றவள், அஸ்வினியைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டாள்.

"வாழ்த்துகள் அஸ்வினி! கோபி ரொம்ப அழகா இருக்காரு. உனக்கு ஏத்த ஜோடி. கல்யாணம் நம்மளைப் பிரிச்சிடுமோன்னு ரொம்ப பயந்துகிட்டிருந்தேன். ஆனா, நம்மளை யாராலும் பிரிக்க முடியாது. எனக்கும் கல்யாணம் முடிவு பண்ணிட்டாங்க. எனக்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளையும் இதே ஊர்தான்!"

"மெய்யாவா? யார் அந்த அதிருஷ்டசாலி?"

"உடனே சொல்லிட்டா எப்படி? அப்புறமா சொல்றேன். நிச்சயதார்த்தம் ஆனதும் முதல் வேலையா நம்ம மாப்பிள்ளைகள் ரெண்டு பேரையும் அறிமுகப்படுத்தி வச்சு நண்பர்களாக்கிடணும்!"

அஸ்வினிக்குக் குழப்பமாக இருந்தது.

'என் கல்யாண விசயம் கேள்விப்பட்டதும் அதிர்ச்சி அடையாமல் துள்ளிக் குதிக்கிறாளே! பரத் அன்று என்னைக் கல்லூரியில் பார்க்க வந்ததை, தன் காதலியைப் பார்க்க வந்தார் என்று யூகித்துச் சொன்னாளே! பிறகெதற்கு இந்த வரனை வரவேற்றுப் பேசுகிறாள்? ஊகூம்... இனியும் வாயை மூடிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இன்று எப்படியாவது பரத்தைப் பற்றி இவளிடம் பேசிவிட வேண்டும். அல்லது பரத்திடமாவது பேசவேண்டும். அவன் மனதில் நான் இருக்கிறேனா என்பதை முதலில் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.'

முடிவு செய்தாள்.

இருவரும் கல்லூரிக்குப் புறப்பட்டனர்.

எதிர்க்காற்றில் பரபரத்த கூந்தல் கற்றைகளை லாவகமாக ஒதுக்கிக்கொண்டாள், அஸ்வினி.

"உனக்குக் கல்யாணம் முடிவான விசயத்தை இவ்வளவு நாளா ஏன் சொல்லலே அமுதா?"

"இன்னும் முழுசா முடிவு பண்ணலே. ஆனா, கிட்டத்தட்ட முடிவான விசயம்தான்!"

"வீட்டுல முடிவுபண்ணினதா? இல்ல... எனக்கே தெரியாம காதல் ஏதாவது?"

"கிட்டத்தட்ட ரெண்டும்தான்!"

"அடிப்பாவி... உன் காதலைக்கூட என்கிட்டே மறைச்சிட்டியா?"

"மறைக்கணும்னு இல்லே. எனக்கே அதிலே குழப்பமா இருந்தது. அவர் பக்கத்துலேயும் சம்மதம்னு அறிகுறி தெரிஞ்ச பிறகுதான் நிம்மதியாச்சு. எனக்கு அவரைப் பிடிச்சிருந்தது ஒருபக்கம் என்றாலும், எங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணணும்னு பெரியவங்க முன்னாடியே முடிவு பண்ணிட்டாங்க!"

"நீ யாரைச் சொல்றே?" அஸ்வினிக்குள் பதற்றம் உருவானது.

"மன்னிச்சிடு... அது ரகசியம்" என்றவள் வேறு சாலையில் வண்டியைத் திருப்பினாள்.

"எங்கே போறே?"

"பரத் ஆபீசுக்கு!"

"ஏன்?"

"எல்லாம் காரணமாத்தான்! உன்னைப் பற்றி அவர் கிட்டே சொல்லணும். பெரிய இடத்துச் சம்பந்தம் கிடைச்சும் உன் முகத்திலே சிரிப்பு இல்லே. அதுக்கு என்ன காரணம்னு எனக்கு மட்டும்தானே தெரியும்? பரத்கிட்டே பேசி நல்ல பதிலை வாங்கித் தர்றேன் வா!" என்றாள்.

அதுவரை இருந்த கலக்கமெல்லாம் அகல... 'குப்'பென மலர்ந்தாள், அஸ்வினி.

## 7

இருவரையும் எதிர்பார்க்காத பரத்தின் வியப்பு, முகத்தில் வெளிப்பட்டது.

"இதென்ன அதிசயம்! தேவதைங்க என் ஆபீஸ் தேடி வந்திருக்கீங்க! வாங்க... வாங்க...!" என்று உற்சாகமாய் வரவேற்றான்.

பெண்கள் இருவருமே வெட்கப்பட்டு அமர்ந்தனர்.

"என்ன சாப்பிடுறீங்க?"

"ஏதாவது..." என்றாள் அமுதா.

உதவியாளரை அழைத்துக் குளிர்பானம் கொண்டுவரச் சொன்னான்.

"என்ன விசயம் அமுதா? காரணமில்லாம வரமாட்டியே!"

"எப்படி கண்டுபிடிச்சீங்க?"



"ரொம்ப படபடப்பா இருக்கியே!" என்றான், ஓரக் கண்ணால் அஸ்வினியைப் பார்த்து.

"நான் மட்டுமில்லே... அஸ்வினியும்தான். படபடப்பா இருக்கா. அவ மகிழ்ச்சி அடைகிற மாதிரி நீங்க ஒரு வார்த்தை சொல்லணும்!"

"என்ன?" புரியாமல் பார்த்தான். கேட்டான்.

"நானும் அஸ்வினியும் எவ்வளவு நெருங்கிய தோழிகள்னு உங்களுக்கே தெரியும்."

"உம்..."

"கல்யாணம்கூட எங்க நட்பைப் பிரிக்க கூடாதுங்கிறதுல உறுதியா இருக்கோம். அதனால வெளியூர் மாப்பிள்ளையைக் கட்டிக்கக்கூடாதுன்னு உறுதியா இருந்தோம். அதிருஷ்ட வசமா எங்க ரெண்டு பேருக்கும் உள்ளூரிலேயே வரன் அமைஞ்சு போச்சு."

"என்ன சொல்றே?" திடுக்கிட்டான்.

அஸ்வினியும் தோழியைக் குழப்பமாய்ப் பார்த்தாள்.

"முழுசா சொல்லிடுறேன். எங்க ரெண்டு பேரோட கணவர்களும் எங்களை மாதிரி நண்பர்களாயிட்டா எங்களுக்குப் பிரச்சினையில்லே... அஸ்வினியோட அதிருஷ்டம் பெரிய இடத்து சம்பந்தம் கிடைச்சிருக்கு."

"எ...என்ன?" என்றலறினான், பரத்.

"ஆமாங்க. தொழிலதிபர் தயாளனோட மகன் கோபிக்கு அஸ்வினிய முடிவு பண்ணி இருக்காங்க. இன்னைலேருந்து கோபி என் நண்பர்னு இவகிட்டே சொல்லுங்க. அப்பதான் நிம்மதியா இருப்பா...!"

"அ...மு...தா...!"

அஸ்வினி இதை எதிர்பார்க்கவில்லை. தன் காதல் விசயம் பற்றிப் பேசுவாள் என்று நினைத்திருந்தாள். அவளோ எதையோ பேசுகிறாள்!

தலை சுற்றுவது போலிருந்தது.

அதைவிட பரத்திற்கு அந்தச் செய்தி மரண அடியாக இருந்தது.

'கல்யாணமா? அஸ்வினி உனக்கா? இன்னொருவனுடனா? அப்படியானால் என் மனதை நீ புரிந்துகொள்ளவில்லையா? உன் விழிப் பார்வையைக் காதல் என்று எண்ணியதெல்லாம் தவறா? என்னைப் பார்த்தால் நாணத்துடன் தலை கவிழ்வதும், அமுதாவின் பின் ஒளிவதும் எதற்காக?'

'சே! நான் அவளைப் புரிந்துகொண்டது தவறா? அல்லது... என் காதலை அவள் புரிந்துகொள்ளாமல்விட்டது தவறா? இல்லை! தவறு என் மீதுதான்!'

'வாயைத் திறந்து என் காதலைச் சொல்லியிருந்தால் இத்தனை பிரச்சினை வந்திருக்காது. அமுதா வேறு என்னைத் தன் கணவனாகவே முடிவு செய்திருக்கிறாள். அவள் பேச்சிலிருந்தே புரிகிறதே. 'கோபியை எங்க நண்பர்னு இவகிட்டே சொல்லுங்க'ன்னு சொல்றதுக்கு என்ன அர்த்தம்?' மனசு வேதனையில் பொங்கியது.

அதே எண்ணம்தான் அஸ்வினியினுள்ளும் ஓடியது.

'எவ்வளவு பெரிய தவறான ஆசையை மனசுக்குள் வளர்த்திருக்கிறேன்? பரத், அமுதாவின் முறைமாப்பிள்ளை. அவளைப் பார்க்க வந்ததை, என்னைப் பார்க்க வந்ததாக அல்லவா தப்புக்கணக்கு போட்டுவிட்டேன்? அமுதா பூடகமாக பேசியதை எல்லாம் எனக்கு சாதகமாக எண்ணிக் கொண்டேன்? என் ஆருயிர் அமுதா ஆசைப்பட்ட பரத்தை நான் ஆசைப்பட்டது பெரிய தவறல்லவா?' வேதனை தாளாமல் உருண்டு திரண்ட கண்ணீரை அமுதா அறியாமல் நாசூக்காய் அவள் துடைத்ததை பரத் பார்த்துவிட்டான்.

பரத்தின் மனசு துடித்தது.

'ஏன் அழுகிறாய் அஸ்வினி? உன் மனதில் என்ன இருக்கிறது? உரிமையோடு என்னால் கேட்க முடியவில்லையே! நீயாவது சொல்லிவிடு கண்மணி!'



அமுதா 'வளவள'வென்று பேசிக்கொண்டிருந்தாள்.

இவர்கள் இருவரும் ஒப்புக்கு ஏதோ பேசினாலும் மவுனமாய் அழுதார்கள்.

"ஏன்... என்கிட்டே சொல்லாம மறைச்சிட்டே?" வகுப்பறையில் பக்கத்தில் அமர்ந்திருந்த அமுதாவிடம் கேட்டாள், அஸ்வினி.

"எதை?"

"பரத்தை நீ காதலிச்சதை!"

"அதான் சொன்னேனே... அதிர்ச்சி செய்தியா இருக்கட்டும்னுதான். ஆனாலும் நான் சொல்லாமலேயே இப்ப கண்டுபிடிச்சிட்டியே!"

"இதுவே ரொம்ப தாமதம்தான்!"

"இங்கே வந்திருந்தாரே.... அப்பவே புரிஞ்சிருப்பேன்னு நினைச்சேன்!"

"தப்புப் பண்ணிட்டேன்."

"என்னது?"

"புரிஞ்சுக்காம போயிட்டேன்!"

"ஏய்... இன்னொரு விசயம் தெரியுமா? பரத்தும், கோபியும் ஒரே கல்லூரியில் படிச்சிருக்காங்க. அதுமட்டுமில்லே... பரத் குடியிருக்கிற தெருவிற்கு ரெண்டாவது தெருவில்தான் கோபியோட பங்களாவும் இருக்கு. இதை பரத் சொன்னப்ப எனக்கு இறக்கை கட்டிப் பறக்கிறமாதிரி இருந்தது. நாம எப்படி எல்லாம் நினைச்சோமோ அதேமாதிரி வாழ்க்கை அமைஞ்சிருக்கு... ரொம்ப ஆச்சரியமாயில்லே?"

சிறுகுழந்தையைப் போல் பரவசப்பட்ட அமுதாவைத்



மா-2

தோளோடு சேர்த்து அணைத்தாள், அஸ்வினி.

"நம்மைப் பிரிக்காத கடவுளுக்குத்தான் நன்றி சொல ணும்" என்றாள்.

அஸ்வினிக்கு கோபி என்று முடிவானபின் எதிலு பற்றில்லாமல் இருந்தான், பரத்.

திருமணம் குறித்து அமுதாவின் பெற்றோர் வீடு தேடி பேச வந்தபோது எல்லாவற்றிற்கும் தலையாட்டி வைத்தா

அதன்பின் திருமண வேலைகள் வேகமாய் நடந்த பரத்– அமுதா நிச்சயதார்த்தம் முடிந்தது. ஒரு வா இடைவெளியில் அஸ்வினி– கோபியின் நிச்சயதார்த்தமு நடந்தது.

திருமணத்திற்கு நாள் குறிக்கப்பட்டது. அதிலும் ஆச்சரி என்னவென்றால் ஒரே நாளில் தேதி குறித்திருந்தனர்.

ஒருவர் மற்றவர் திருமணத்தில் கலந்துகொள்ள வசதியா அமுதா தன் திருமணத்தை மூன்று நாள் கழித்து வை ஏற்பாடு செய்தாள்.

புதுமண ஜோடிகள் ஒரு உயர்தர உணவகத்தில் சந்தி ஏற்பாடானது. இதுவும் அமுதாவின் ஏற்பாடுதான்.

அஸ்வினி முதலில் மறுத்தாள்.

"ஐயோ... வேண்டாம் அமுதா! கல்யாணத்து முன்னாடியே வெளியில் சந்திக்கிறது ரொம்ப தப்பு. எ வீட்டுக்குத் தெரிஞ்சா திட்டுவாங்க!"

"தெரிஞ்சாதானே? சரியான பட்டிக்காடா இருக்கி கல்யாணத்துக்கு முன்னாடியே ஒருத்தரை ஒருத்தர் நல் புரிஞ்சுக்கிறதுக்கு இப்படிப்பட்ட சந்திப்புகள் அவசியம். ப என் மாமா மகன்தான். இருந்தாலும் அவரைப் ப அதிகமா எனக்குத் தெரியாது. இப்படி நடந்துகிட் பிடிக்கும், பிடிக்காது. சாப்பிட இது பிடிக்கும், பிடிக்கா இன்னும் நிறைய விசயம் இருக்கு. அதை விட்டுட்

லையிலே கல்யாணம், அடுத்து முதலிரவு. அதுக்குப் பிறகு சிப் பழகிப் புரிஞ்சுக்கிறதுங்கிறது ரொம்ப தப்பு."

"நீ சொல்றது சரிதான் அமுதா! ஆனா, கோபி தப்பா டுத்துக்கிட்டாருன்னா...?"

"அம்மணி... இப்பவே வீட்டுக்காரருக்குப் பயப்படுறீங்களோ? ஒரு உண்மையைப் போட்டு உடைக்கட்டுமா? ப்படி ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு பண்ணுன்னு என்கிட்டே ன்னதே உன் வருங்காலக் கணவர் கோபிதான்... தெரியுமா...?"

"ஏய்... என்ன சொல்றே...?"

"ஆமான்டி! கோபிக்கு உன் மேலே கொள்ளைப் பிரியம். ன் அமைதியும், அடக்கமும் அவருக்கு ரொம்ப பிடிச்சுப் பாச்சு. வெளியிலே சந்திச்சுப் பேசணும்னு ஆசைப்படுறார். விர, நாங்க இன்னொரு திட்டமும் வச்சிருக்கோம்..."

"என்ன அது?"

"நாளைக்குச் சொல்றேனே!"

"எல்லாத்தையும் வச்சிதான் சொல்றே!" செல்லமாய் தாழியை அடித்தாள், அஸ்வினி.

முன்னரே பதிவு செய்த மேசையை நால்வரும் ஆக்கிரமித்திருந்தனர். விதவிதமான உணவுப் பொருட்கள் திரே இருந்தன.

பெண்கள் இருவரும் ஒருபக்கமும், ஆண்கள் இருவரும் திர்ப்பக்கமும் அமர்ந்திருந்தனர்.

கோபி, அஸ்வினியை விழியகலாமல் பார்த்து பரவசப் ட்டான்.

'அப்பா, எனக்கு அற்புதமான பெண்ணைத்தான் தேர்வு சய்திருக்கிறார்!'

பரத், பிறர் அறியாதவாறு அஸ்வினியைப் பார்த்து தயத்திற்குள் நிரப்பிக்கொண்டான். அது தவறு என்று

புரிந்தாலும், அவனால் அதைத் தவிர்க்க இயலவில்லை.

"என்ன கோபி? இப்படியே பார்த்துக்கிட்டிருந் எப்படி? நிறைய பேசணும்னு ஆசைப்பட்டீங்களே பேசுங்க...!"

வெட்கத்துடன் சிரித்தவன், "சாப்பிடு அஸ்வினி" என் உணவுத் தட்டை அவளருகில் தள்ளி வைத்தான்.

அஸ்வினி நாணத்துடன் தலைகவிழ்ந்தாள்.

"இவங்க சரி வரமாட்டாங்க... நீங்க பேசுங்க பரத்!"

"வியாபாரம் எப்படிப் போகுது கோபி?"

"போன ஆண்டைவிட இந்த ஆண்டு ரெண்டு மட லாபம் கிடைக்கிற அளவுக்கு..."

"ஐயோடா! இதைப் பேசவா இங்கே கூடி இருக்கோம் தலையில் கை வைத்துச் செல்லமாய் அலுத்துக்கொண்டா அமுதா.

"ரெண்டு பேரும் வியாபாரத்துல கவனமா இருந்தத இப்பதான் நாலஞ்சு ஆண்டா எங்களுக்குள்ளே தொட இல்ல...! அதுக்கு முன்னாடி நாங்க எவ்வளவு நெருங் நண்பர்கள் தெரியுமா?"

"ஆமாம்... இதை நாங்க எதிர்பார்க்கவே இல்லை... உயி தோழிகள்தான் இந்த உயிர்த் தோழர்களுக்கு மனைவி வருவீங்கன்னு நினைக்கவில்லை, பரத்!"

"அப்படியா...?"

"ஆமா. இதுக்கு கடவுளோட அனுக்கிரகம்தான் காரண நீ ஏதாவது பேசு அஸ்வினி!" என்றாள், அமுதா.

"என்ன பேசறது?" கிசுகிசுத்தாள்.

"அன்பே, ஆருயிரேன்னு பேசு!"

"கிண்டல் பண்ணாதே... சும்மா இரு!"

"அவளை உங்களுக்குப் பிடிச்சிருக்கான்னு கேட் சொல்றா?"



"ஏய்...!" தோழியின் கையைப் பற்றி அழுத்தினாள், அஸ்வினி.

"ரொம்ப பிடிச்சிருக்கு!" என்றான், அழகான புன்னகையுடன்.

அஸ்வினி சட்டென அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு வெட்கமாய் தலை கவிழ்ந்தாள். இதயம் படக், படக் என அடித்துக்கொண்டது.

"நீயும் சொல்லு அஸ்வினி!"

"என்னன்னு?"

"கோபியைப் பிடிச்சிருக்குன்னு சொல்லு!"

"ஊகூம்..."

"இங்கே சொல்ல என் அஸ்வினிக்கு வெட்கமாக இருக்கிறதாம்!"

பரத்திற்கு அங்கு அமர்ந்திருப்பதற்கே கஷ்டமாக இருந்தது.

"வேறெங்கே சொல்வாளாம்?" குறும்புடன் கேட்டான், கோபி.

"தனியே... அடுத்த வாரம் கொடைக்கானலில்?"

"கொடைக்கானலா? என்ன சொல்றே நீ?" அஸ்வினியும் பரத்தும் ஒரு சேர கேட்க, அமுதாவும் கோபியும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

"ஆமா... அடுத்த வாரம் நாம நாலு பேரும் கொடைக்கானலுக்குப் போறோம்!"

"அமுதா!"

"என்ன...?"

"இதில் மறுத்துப் பேச யாருக்கும் உரிமையில்லை."

"அப்ப... கல்லூரியிலிருந்து சுற்றுலா போறதா சொல்லிவிட்டு நாம போறோம்... சரியா...?" என்றாள், அமுதா தீர்மானமாய்.

# 8

தன் வீட்டிலும், அஸ்வினி வீட்டிலும் கல்லூரிச் சுற்று என்று பொய் சொல்லி... எப்படியோ அனுமதி வா விட்டாள், அமுதா.

இனி எப்போது போகப்போகிறார்கள்? திருமணமா போகிறதே என்ற சலுகையுடன் இருவர் வீட்டிலும் சம்மதி விட்டனர்.

'அஸ்வினியை நினைத்து உருகக்கூடாது. அவள் கோபிய மனைவியாகப் போகிறாள். அவளை நேசித்ததை அறிந்த அமுதா வருத்தப்படுவாள். பாவம்... நல்ல பெண். கள் கபடமில்லாதவள். என் மீது உயிரையே வைத்திருப்ப அவளுக்கு உண்மையாய் மனசு கோணாமல் நடக்க வேண் இந்த நேரத்தில் கொடைக்கானல் போவது நல்லதுதா அவளிடம் ஆத்மார்த்தமாய் பழகலாம். காதலை வள லாம்' என்றெண்ணினான், பரத்.

கோபிக்கும் மனசு உற்சாகமாய் இருந்தது.

அதென்னவோ அஸ்வினியைப் பார்த்த மாத்திரத் ரொம்பவே பிடித்திருந்தது. அவள் நடுத்தரக் குடும்பத் சேர்ந்த சாதாரணப் பெண் என்ற எண்ணமே எழவில்லை

எந்தப் பெண்ணிடமும் இல்லாத ஏதோ ஒரு தனித்து அவளிடம் இருப்பது போல் பட்டது. தனக்காகக் கட அனுப்பி வைத்த தேவதையாகவே அவளைக் கருதினான்

அவளுடன் தனியாகப் பொழுதைக் கழிக்கப்போகிறே என்கிற கற்பனையே சுகமாக இருந்தது.

அவள் மடியில் தலைவைத்துப் படுத்து... பூவ் விரல்களை நீவிவிட்டு, வெட்கத்தில் சிவக்கும் பட் கன்னத்தில் மெல்ல இதழ்பதித்து... அவள் நாணப்ப



சுதாரிப்பதற்குள் கன்னத்தைக் கவ்வி...

அனுமதிப்பாளா?

ஏன் மாட்டாள்? என்னைப் போன்ற கனவுகளும் ஏக்கமும் அவளுக்குள்ளும் இருக்காதா என்ன? பெண்கள் அவ்வளவு எளிதில் மனதிலுள்ள ஆசைகளை வெளிப்படுத்திவிட மாட்டார்கள். நாம்தான் வெளிக்கொணர ஆயத்தப்படுத்த வேண்டும்' அவன் வயசுக்கே உரிய கனவுகளில் மூழ்கிப் போனான்.

ஒரே காரில் நால்வரும் கொடைக்கானலுக்குப் பயணமானார்கள்.

சிரிப்பும் அரட்டையுமாய் போய்ச் சேர்ந்த அவர்களைக் குளிர்த் தென்றல் ஆரத் தழுவி வரவேற்றது.

எங்கு நோக்கினாலும் பசுமை, மேகம்படர்ந்த மலைகள், சுவாசத்தைச் சுகப்படுத்திய யூகலிப்ட்ஸ் மணம் கொத்துக் கொத்தாய்ப் பழங்களைத் தாங்கிக்கொண்டிருந்த பலா மரங்கள். மெத்தென்று கால்களை ஈரப்படுத்திய பசும்புற்கள். விதவிதமான மலர்கள், மலைப் பகுதிக்கே உரிய பாரம்பரிய வேலைப்பாடுகளுடன்கூடிய சிறு குடில்கள்.

அந்த ரம்மியமான சூழ்நிலை, இள வாலிப நெஞ்சங்களில் உணர்வலைகளைக் கிளப்பி, உசுப்பிவிட்டது.

முன்னரே ஏற்பாடு செய்திருந்த தனிக் குடில்களில் பெண்கள் தனியாகவும், ஆண்கள் தனியாகவும் தங்கி ஓய்வெடுத்தனர்.

"கொடைக்கானல் ரொம்ப அழகு இல்லே?" உள்ளங் கைகளைப் பரபரவென தேய்த்துக் கன்னத்தில் வைத்துக் கொண்டு கேட்டாள், அஸ்வினி.

"ரொம்ப ரொம்ப!"

"இங்கே வருவது எனக்கு இதுதான் முதல் தடவை! உனக்கு?"

"பத்து வயசிலே வந்திருக்கேன். இங்கே அடிக்கடி விபத்து நடப்பதால் அம்மா அனுப்ப பயப்படுவாங்க. இப்பக்கூட ரொம்ப சமாளிச்சுதான் அனுமதி வாங்கினேன். ஆனாலும் இப்பதான் முதன்முதலா வர்ற மாதிரி இருக்கு. ஏன்னா, எ பரத்கூட வந்திருக்கேனே!"

"இப்படி வந்திருக்கோமே... இது தப்பில்லையா அமுதா?"

"பைத்தியக்காரி மாதிரி பேசாதே. யாரோடு வந்திரு கிறோம்? வருங்காலக் கணவனுடன்தானே?"

"தவறாக ஏதும் நடந்துவிடுமோன்னு பயமாக இருக்கு அதுவும் நான்கு நாட்கள் தங்கப்போகிறோம்!"

"அது தப்பில்லை அஸ்வினி. அடுத்த மாதம் திருமண நடக்கப்போகுது. அதை ஞாபகம் வச்சுக்கோ!"

அழைப்புமணி அலறியது.

"யாரது?" என்று கேட்டாள், அமுதா.

"நாங்கதான்."

கதவைத் திறந்தாள்.

பரத்தும் கோபியும், குளித்து உடை மாற்றி தயாரா வந்திருந்தனர்.

"நாங்க ரெடி. நீங்க ரெடியா?" கோபி கிண்டலாய் கேட்டான்.

"நாங்களும் ரெடி!" இப்போதும் அமுதாதான் பேசினா

"அஸ்வினி வாயே திறக்கமாட்டாளா?" கோபி ஆதங்கமு ஆர்வமுமாய்க் கேட்டான்.

"இப்ப சாவி உங்ககிட்டே இருக்கு. அவள் வாயை திறக் வைக்கவேண்டியது உங்க பொறுப்பு!"

"ஏய்... சும்மா இரு. என்னென்னமோ பேசிக்கிட்டு அஸ்வினி கிசுகிசுப்பாய்க் கண்டித்தாள்.

பரத் வேண்டுமென்றே கவனத்தை வேறு பக்க



செலுத்தினான்.

"நான் சொல்லலேன்னாலும் கோபி அதைத்தான் செய்வார்."

"நிச்சயமா!" குறுகுறுவென அஸ்வினியையே பார்த்தான், கோபி.

"சரி... கார் காத்திட்டிருக்கு. இப்ப கிளம்பினாதான், பார்க்கவேண்டிய இடங்களை ஒண்ணுவிடாம பார்க்கலாம்" என்றான், பரத்.

"கார் வந்து காத்திருக்குதா? என்ன சொல்றீங்க? நம்ம கார் என்னாச்சு?"

"நம்ம கார் பத்திரமாத்தான் இருக்கு. இந்த மலைச்சரிவுல கார் ஓட்டுறது கஷ்டம். இங்கேயே நிறைய சுற்றுலா கார்கள் இருக்கு. முக்கியமாய்ப் பார்க்கவேண்டிய இடங்களுக்கு அவங்களே கூட்டிக்கிட்டு போய்க் காட்டிடுவாங்க!"

"பரவாயில்லையே... நமக்கு வேலை மிச்சம் இல்லையா? நாங்களும் தயார். கிளம்பலாம்!" அமுதா சொல்ல அனைவரும் புறப்பட்டனர்.

காரில் முன்பக்கமும் பின்பக்கமுமாய் இரண்டு ஜோடிகளும் அமர்ந்தனர்.

பூங்கா, படகு சவாரி என்று ஒவ்வொரு இடமாகச் சுற்றினர்.

அமைதிப் பள்ளத்தாக்கு மிகவும் ஆபத்தான இடம் என்பதால் சுற்றுலாவாசிகள் ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்தனர்.

சற்று தொலைவிலிருந்து பார்க்கும்போதே அதன் அழகு பரவசப்படுத்திற்று.

வெண்ணிறப் போர்வையொன்றைப் போர்த்தியது போல, அந்த ஆழமான, அகலமான பள்ளத்தாக்கைக் குளிர்மேகங்கள் அணைத்திருந்த அழகு பார்க்கக் கண் கோடி வேண்டும்.

அழகு ஆபத்தானது என்று இதைத்தான் சொல்லி

இருப்பார்களோ?

கரணம் தப்பினால் மரணம் என்பது போல் கால் தவறினால் போதும் சர்ரென்று அதலபாதாளத்தில் விழவேண்டியதுதான். நினைத்தபோதெல்லாம் மழை பெய்யும் இடமாகையால், சரிவான பாதை வழுக்கியது.

அமுதாவும், கோபியும் சமாளித்து விரைவாய் முன்னே போய் நின்று, இயற்கை அழகைக் கண்கொட்டாமல் ரசித்தனர்.

பரத் முன்னே செல்ல, அஸ்வினி மெல்ல பின்னே வந்தாள்.

ஈரமான களிமண் வழுக்கிவிட, "பரத்" என்றலறியபடி அஸ்வினி சறுக்கி விழ, கண்ணிமைக்கும் பொழுதில் அவளைத் தாங்கிப்பிடித்தான், பரத்.

அவன் மட்டும் இல்லையென்றால் சர்ரென்று வழுக்கி சென்று மேகக்குவியலில் விழுந்து காணாமல் போயிருக்க வேண்டியதுதான்.

நினைத்துப் பார்க்கவேமுடியாத கொடுமை அது. பயத்தில் உடல் நடுங்க அவனை இறுக்கிப் பிடித்துக்கொண்டாள்.

மிக நெருக்கத்தில் அவள் முகம்! வடிவான, சதைப் பிடிப்பான இதழ்கள் நடுக்கத்தில் துடித்தன.

அவளையே பார்த்துக்கொண்டிருந்த பரத்திற்கு அந்த துடிப்பை அடக்க வேண்டும் போல் ஆவல் எழுந்தது.

ஏனோ... இருவருக்குமே விலக மனமில்லை.

"என்ன... என்ன ஆச்சு? பார்த்து வரக்கூடாதா அஸ்வினி" பதறியபடி அருகில் ஓடிவந்தான், கோபி.

பின்னால் அமுதா.

சட்டென இருவரும் விலகினர்.

அழகழகான மலர்கள் கொத்துக் கொத்தாய் அலங்கரித்து வகுத்திருக்க... பார்வையாளர்கள் கூட்டம் அதிகமிருந்தது.

அமைதிப் பள்ளத்தாக்கில் ஏற்பட்ட அதிர்ச்சியில் அஸ்வினி



களைத்திருந்ததால், 'தன்னால் நடக்க முடியாது' என்று புல்வெளியில் அமர்ந்துவிட்டாள்.

அமுதாவும், கோபியும் நேரத்தை வீணாக்காமல், சந்தர்ப்பத்தைச் சரியானபடி பயன்படுத்த வேண்டும் என்கிற கொள்கையுடன் ஒவ்வொன்றையும் ரசித்து கேமிராவில் பதிவு செய்தனர்.

அமுதா கேட்டுக்கொண்டதற்கிணங்க, பரத், அஸ்வினிக்கு துணையாக அமர்ந்திருந்தான்.

ஆனால், முன்பிலும் அதிகமான தயக்கத்தினால் அவர்கள் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.

"ஜோடிப் பொருத்தம் அமர்க்களமாயில்லை?" ஒரு வயதான தம்பதியினர் அவர்களைச் சிரிப்புடன் பார்த்துப் பேசிக்கொண்டே போக...

இருவரும் திடுக்கிட்டுப் பார்த்துக்கொண்டனர்.

இதயங்கள் துடிதுடித்தன... படபடத்தன.

"இந்த விளையாட்டு அவசியமா கோபி?"

"இதிலே என்ன இருக்கு? சும்மா விளையாட்டுக்கு ஏமாத்தறதுக்காக, நீ என் அறைக்கும், நான் உன் அறைக்கும் போகப்போகிறோம். அமுதா என்னைப் பார்த்து அசடுவழியப் போகிறா. அஸ்வினி உன்னைப் பார்த்து அசடுவழிவா. அவங்க ரெண்டு பேரும் தயாராகி வர்றதுக்குள்ளே... நீ என் அறைக்கு ஓடு... சீக்கிரம்!"

அரை மனதுடன் தலையாட்டினான், பரத்.

இருவரும் ஒரே நிறத்தில் உடை அணிந்திருந்தது வசதியாய்ப் போயிற்று. அதுவும் இரண்டு பேரும், ஒரே உயரம், நிறம் என்பது இன்னும் வசதியாய் இருந்தது.

நடைபாதையில் அமுதாவும் அஸ்வினியும் வந்து கொண்டிருந்தனர்.

"எனக்கென்னவோ இதிலெல்லாம் கொஞ்சம்கூட

விருப்பமில்லை அமுதா! கல்யாணத்துக்கு முன்னா, அவருடன் தனியாவா? அது சரியில்லை."

"இரவு முழுக்கவா தங்கப்போகிறோம்? சும்மா ரெண் மணி நேரம் பேசிட்டு, அப்புறம் நீயும் நானும் வழக்கம் போ தங்கிக்கப்போறோம். கோபி உன்கிட்டே தனியா பேச ஆசை படுறார். நீ சரியான உம்மணா மூஞ்சியா இருக்கிறே! அவ ஆசைப்படி பேசு, பழகு. அதனால என்ன குறைஞ்சிட போறே?"

அஸ்வினி அமைதியாய் இருந்தாள்.

அறை வாசலில் வந்து நின்றனர்.

"போ... உள்ளே!" கோபியின் அறையினுள் அஸ்வினிை தள்ளிவிட்டாள்.

பிறகு தானும் பக்கத்தில் இருந்த அறைக்குச் சென்றா அமுதா.

அவளுக்கு முதுகு காட்டியபடி ஜன்னலோரம் நின் பொங்கிவந்த சிரிப்பை அடக்கிக்கொண்டிருந்தான், கோபி.

காதலுடன் அவனை நெருங்கினாள், அமுதா.

"பரத்...."

"........."

"நம்ம கல்யாணத்தை அம்மா – அப்பா முடி பண்ணினாலும், கட்டினா உங்களைத்தான் கட்டுவேன் நான் எப்பவோ தீர்மானிச்சுட்டேன். ஏன்னா, நா உங்களைக் காதலிக்கிறேன்!" அவனை நெருங்கி முதுகோ சேர்த்து அணைக்க முற்பட்டவளை... பெரிய சிரிப்புட திரும்பினான், கோபி.

"ஓகோ... அப்படியா?" என்றான், கேலியாய்.

அங்கு அவனை எதிர்பார்க்காத அமுதா தாளமாட்டா வெட்கத்துடன் முகத்தை மூடிக்கொண்டாள்.

"தப்பா நினைச்சுக்காதே அமுதா. சும்மா உங்க ரெண்



பேரையும் ஏமாத்த இப்படி ஆள் மாறினோம். அஸ்வினி அலறியடிச்சுக்கிட்டு வர்றவரைக்கும், 'நீ பரத்தை எப்படி எல்லாம் காதலிக்கிறேன்னு சொல்லு" கதை கேட்கும் சுவாரசியத்துடன் அவள் எதிரில் அமர்ந்தான்.

## 9

ஜன்னலோரம் முதுகு காட்டியபடி நின்றிருந்த பரத்தை நோக்கி தயக்கமும், பயமும், வெட்கமுமாய் மெல்ல அடிமேல் அடி எடுத்து வைத்து நடந்தாள், அஸ்வினி.

அவனோ திரும்பாமல் நின்றிருந்தான்.

"க்கும்..." என்று செறுமி, தான் வந்திருப்பதை உணர்த்தினாள்.

"இங்கே வா" என்றான், மெல்லிய குரலில்.

அருகில் சென்றாள்.

திடீரென்று மின்சாரம் தடைபட... குபீரென்று இருட்டு பரவியது.

அஸ்வினி பயந்துபோய் அவனைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள்.

உடல் சிலிர்த்தது, பரத்திற்கு.

அவளைத் தன் பக்கமாய் இழுத்து மார்போடு சேர்த்து தழுவினான்.

பயத்தில் அவன் மார்பில் ஒட்டிக்கொண்டாள்.

பரத்திற்கு அவளின் துடித்த இதழ் நினைவிற்கு வர, அழுத்தமாய்க் கவ்வினான்.

இருட்டு, குளிர், தனிமை, வாலிபம்... இருவரின் எதிர்ப்புச் சக்தியையும் கட்டிப்போட்டுவிட்டு உணர்ச்சிகளைத்

துரண்டிவிட....

நடக்கக்கூடாத உறவிற்கு அஸ்திவாரம் போட்டனர்.

பரத்திடமிருந்த நல்ல குணங்கள் அத்தனையும் உறங்கிப் போய் மிருகம் விழித்துக்கொண்டது. அஸ்வினி, கோபியின் சொத்து என்ற எண்ணத்தை அடியோடு விலக்கிவிட்டு, சில நிமிடங்களிலேயே அவளை முழுமையாய்ப் பிழிந்து எடுத்து விட்டான்.

பத்தாவது நிமிடம் மின்சாரம் வந்தது.

நெற்றியில் இதழ் பதித்துவிட்டு, முகத்தை உயர்த்தியவனைப் பார்த்து தீயைத் தொட்டாற்போல் அதிர்ந்தாள், அஸ்வினி.

"நீங்களா?"

இரவில் உறக்கம் வராமல் கொட்டக் கொட்ட விழித்திருந்தான், பரத்.

"ரொம்ப கட்டுப்பெட்டியா இருக்கிறாள்! சரியாகவே பேசமாட்டேங்கிறா... என்னதான் வெட்கம்னாலும் இப்படியா? இவளை வழிக்குக் கொண்டுவரவே மூணு மாசம் ஆகும் போலிருக்கே!" என்று புலம்பியபடி தூங்கிப் போய்விட்டான், கோபி.

பரத்திற்கு தன்னை நினைத்தாலே கோபமாய் வந்தது.

'நானா... நானா அப்படி நடந்தேன்? இன்னொருத்தருக்கு நிச்சயம் செய்யப்பட்ட பெண் என்று தெரிந்தும் என் உணர்ச்சிக்கு இரையாக்கிக்கொண்டேனே... என்ன மனிதன் நான்? இல்லை அவள் மீது நான் வைத்திருந்த அளவுக்கதிகமான காதல்தான் என்னை அப்படி நடக்க வைத்திருக்கிறது. என்றாலும் நானொரு சந்தர்ப்பவாதி. என் சுயநலத்துக்காக அவளைப் பலிவாங்கிவிட்டேன். என்னைக் கோபி என்று நினைத்துதான் அனுமதித்திருக்கிறாள்... எவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகி நான்? என்ன செய்யப் போகிறேன்?



விசயமறிந்தால் அமுதா என்னைப் பற்றி என்ன நினைப்பாள்? தீராத பழியல்லவா செய்துவிட்டேன்?'

குற்ற உணர்ச்சி அவனைப் பாடாய்ப்படுத்திற்று.

அஸ்வினிக்கு பயத்தில் காய்ச்சல் வந்துவிட்டது.

பரத்தின் அறையிலிருந்து வந்தவளால் கோபியை நிமிர்ந்து பார்க்கமுடியாதபடி தொண்டையில் முள் சிக்கிக்கொண்ட உணர்வு.

உண்மையாகவே பரத்தை மனதிலிருந்து அகற்றி, கோபியுடன் ஆத்மார்த்தமாய்ப் பழகி, அவனுக்கு நல்ல மனைவியாய் வாழ ஆசைப்பட்டாள்.

ஆனால், நடந்ததோ?

தலையை வலிக்கிறது என்று சுருண்டு படுத்துவிட்டவளைத் தொந்தரவு செய்ய கோபிக்கு மனமில்லை. பரத்துடன் படுத்துக்கொண்டான்.

நள்ளிரவில் அஸ்வினிக்கு காய்ச்சல் கூடிவிட்டது.

அமுதா பயந்துவிட்டாள். கோபியையும், பரத்தையும் எழுப்பி அழைத்து வந்தாள்.

மருத்துவர் வரவழைக்கப்பட்டார். ஊசி போட்டார். மருந்து, மாத்திரை கொடுத்தார்.

காய்ச்சல் குறைய மறுத்து அடம்பிடித்தது. உடம்பு தூக்கித் தூக்கிப் போடவே விடிந்ததும், சென்னைக்குக் கிளம்பி விட்டார்கள்.

அஸ்வினியின் பெற்றோர் பதறிவிட்டனர்.

மருத்துவமனையில் சேர்த்து... மூன்று நாளான பிறகே இயல்பு நிலைக்கு வந்தாள்.

வீட்டிற்கு அழைத்து வந்தபிறகும் எதையோ பறிகொடுத்தவளைப் போல் காணப்பட்ட மகளைப் பார்த்து பெற்றவர்கள் பயந்துபோயினர்.

தயாளனும், கோபியும் வீட்டிற்கு வந்து நலம் விசாரித்தன குற்ற உணர்வு, அஸ்வினியை நிமிர்ந்து பார்க்கவிடாம தடுத்தது.

அப்பாவிற்குத் தெரியாமல் கிசுகிசுத்தான், கோபி.

"எல்லாம் என்னாலதான் அஸ்வினி! என்னோட தனிய இருக்கனும்ங்கிற பயத்திலேதான் இப்படியாயிடுச்சு மன்னிச்சிடு" கன்னத்தை மென்மையாய் வருடி, இதமாய சொன்னபோது... பொங்கிவந்த அழுகையைக் கட்டுப்படுத் சிரமமாய் இருந்தது.

"உடம்பை நல்லா கவனிச்சுக்கம்மா. மனசுல எந்தக் கு யும் இருக்கக்கூடாது. அப்புறம் உடம்பு சரியில்லைங்கி காரணத்தை வச்சு கல்யாணம் தள்ளிப்போயிட்டபோகு நீ சிக்கிரமா எங்க வீட்டுக்கு விளக்கேத்த வரணும்!" என்றா தயாளன்.

அஸ்வினிக்குத் தன் உடம்பெங்கும் புழுக்கள் நெளிவ போல் இருந்தது.

அவர்கள் சென்றுவிட்டார்கள்.


நடந்த சம்பவத்தை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

பரத் மீது அவள் அதுவரை வைத்திருந்த காதலு மரியாதையும் தவிடுபொடியானது.

'ஆள் மாறாட்டம் செய்தது கோபியும், பரத்தும்தான் எனக்கும், அமுதாவுக்கும் தெரிய வாய்ப்பில்லை. அறைக்கு வந்தது நான்தான் என்று தெரிந்தே பரத் என்னைச் சூறையா இருக்கிறார் என்றால்...? அவர் எப்படி நல்ல மனிதனா இருக்க முடியும்?

நண்பனுக்கும், மனைவியாய் வரப்போகிறவளுக்கும் நண்பனின் மனைவியாக ஆகப்போகிறவளுக்குமல்லவ நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்? கறைபடிந் என்னை, குழந்தை உள்ளம் கொண்ட கோபிக்கு எப்படி கொடுப்பேன்? என்ன செய்யப்போகிறேன்? இந்த





கல்யாணத்தை எப்படியாவது நிறுத்தியாகணுமே...'

'எப்படி நிறுத்துவது?'

யோசிக்க யோசிக்க தலைவலிதான் அதிகமாயிற்று.

அன்று...

அதிசயமாய் பரத் அவளுக்கு போன் பண்ணினான்.

"எப்படியிருக்கே அஸ்வினி?"

"........."

"நீ என்மேல கோபமாயிருக்கேன்னு எனக்கு நல்லாவே தெரியும். நடந்த தவறுக்கு நான்தான் முழுக் காரணம். அதுக்காக என்னை மன்னிச்சிடுன்னு சொல்லித் தப்பிக்க நினைக்கலே. ஒரு உண்மையைச் சொல்லட்டுமா? நான் உன்னை நேசிச்சேன், உன்னையே கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்பட்டேன்..."

"எ...என்ன?"

"ஆமாம் அஸ்வினி! அதை உன்னிடம் சொல்ல சந்தர்ப்பம் பார்த்திருந்தேன். ஆனா, அதுக்குள்ளே உனக்கு நிச்சயம் ஆயிடுச்சு. நான் துடிச்சுப்போயிட்டேன். அந்த நேரம் பார்த்து வீட்டில் அமுதாவுக்கும், எனக்கும் நிச்சயம் பண்ணிட்டாங்க. மறுக்கமுடியாத சூழ்நிலை..."

அஸ்வினியால் நம்ப முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை.

'பரத்தும் என்னை நேசித்தாரா? ஊமைக்கோட்டானாய் இருந்து என் வாழ்க்கையை நானே கெடுத்துக்கொண்டேனே' கண்ணீர் பெருகி கன்னத்தை நனைத்தது.

"இப்பக்கூட ஒண்ணும் ஆகிடலை! நீயும், நானும் போலித்தனமா வாழுறதைவிட, நாம ரெண்டு பேரும் வாழ்க்கையிலே ஒண்ணுசேருவோம்."

"எ... என்னது...?"

"ஆமாம் அஸ்வினி! நடந்த உண்மையை உங்க வீட்டில்



சொல்லி, கல்யாணத்தை நிறுத்து. நானும் நிறுத்திடுறேன். நானே உங்க வீட்டுல வந்து பேசுறேன்!"

"என்ன பேச்சு பேசுறீங்க? இதென்ன சினிமாவா? நினைச்சப்ப காட்சிகள் மாறுவதற்கு? இதனால என்னென்ன விளைவுகள் ஏற்படும் தெரியுமா?"

"அதைப்பற்றி யோசிக்க இப்ப அவகாசம் இல்லை அஸ்வினி."

"ஆனா, அவசியம் இருக்கே?"

"என்ன சொல்றே?"

"என் கல்யாணம் நடக்காது. அது உறுதி. ஆனா, உங்க கல்யாணம் நடக்கணும், நடக்கும்!"

"புரியலே..."

"அமுதாவுக்கும், எனக்கும் உள்ள நட்பு உங்களுக்கே நல்லாத் தெரியும். "திருமணம் நம்ம நட்பைப் பிரிச்சிடக் கூடாதுன்னு அழுத நல்ல தோழி. அவளுக்காக நான் என் உயிரையும் கொடுப்பேன். காதல் தோல்வியிலே முடிஞ்சா எவ்வளவு வலியைத் தரும் என்பது உங்களுக்கே தெரியும். அமுதா உங்களை உயிருக்குயிரா காதலிக்கிறா. நீங்க எடுக்க நினைக்கிற முடிவால் அவள் எந்தளவிற்குப் பாதிக்கப் படுவாள்னு நினைச்சுப் பாருங்க."

"அதுக்காக?"

"இந்த எண்ணத்தையே மறந்திடுங்க. உங்க மனசுல இருந்து என் நினைப்பையும் போக்கிடுங்க. உங்களைப் பிரிஞ்சி அமுதாவால் வாழமுடியாது. என்னால அவளோட வாழ்க்கை பாழாகிறதைப் பார்த்துக்கிட்டு நான் உயிரோடு இருக்க மாட்டேன். என் வாழ்க்கையில் நடந்தது விபத்து. அது அமுதா உட்பட யாருக்கும் தெரிய வேண்டாம்! தெரிஞ்சா... அவள் உயிரோடு இருக்கமாட்டா! எங்க நட்பைப் பிரிக்கிற எந்த உறவும் எனக்குத் தேவையில்லை."

"அஸ்வினி..."

"தயவுசெஞ்சு உங்க கல்யாண ஏற்பாட்டைக் கவனியுங்க இனி, இது விசயமாய் தயவுசெய்து பேசாதீங்க" என்று கூறிவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டாள்.

மனசு லேசானது போல் இருந்தது.

'பரத் என்னைக் காமத்தோடு தொடவில்லை, காதலோடு தான் தொட்டிருக்கிறார். போதும்... இனி எந்த நினைப்பு எனக்குள் இருக்கக்கூடாது. அமுதா நன்றாயிருக்க வேண்டும் அவள் மகிழ்ச்சி எனக்கு முக்கியம்! தவிர, எனக்கு கோபிக்கும் நடக்கவுள்ள கல்யாணத்தை உடனே நிறுத்தியாக வேண்டும்.'

'சரி... என்ன காரணத்தைச் சொல்லி நிறுத்துவது? கோபி மீது குறை சொல்ல எதுவுமில்லாதபோது என்னவென்று சொல்வேன்? அப்படியானால் நான் வேறு யாரையோ நேசிக்கிறேன் என்றல்லவா நினைத்துக்கொள்வார்கள் என்ன சொல்லப்போகிறேன்? எவ்வளவு காலத்திற் கல்யாணமே வேண்டாம் என்று தவிர்க்க முடியும்?

எனக்கடுத்து செல்வி இருக்கிறாள். அவளுக்கும் வரன் பார்க்கிறார்கள். அப்படியிருக்க, நான் சொல்வதை லட்சிய செய்வார்களா? அப்பாவின் உடல்நிலை சரியில்லை. எந் அதிர்ச்சியான விசயத்தையும் தாங்கிக்கொள்ளும் நிலையி இல்லை. திருமணத்தை நிறுத்துங்கள் என்ற வார்த்தை அவருக்கு அதிர்ச்சியைத் தருமே?

ஆனால்... ஆனால்... எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்தியாக வேண்டும். என்னால் காலம் முழுக்க பொய்யா வாழமுடியாது. என்ன செய்யப்போகிறேன்? கடவுளே எனக்கு ஒரு வழிகாட்டு!—திக்குத் தெரியாத காட்டில் தவிப்பு போல் தவித்தாள், அஸ்வினி.

**சே**துராமனும் செண்பகமும் களைப்புடன் வீட்டிற்கு நுழைந்தனர்.

"அஸ்வினி... அம்மாவுக்குக் குடிக்க கொஞ்சம் தண்ணி



கொண்டு வா."

தண்ணீர் கொண்டுவந்தவள், "ஏம்ப்பா, அம்மா ரொம்ப சோர்வா இருக்காங்க?"

"உனக்கு திடீர்னு உடம்புக்கு முடியாமபோச்சில்லே? கல்யாணம் நடக்கப்போகிற நேரத்திலே இதென்ன சோதனைன்னு பயந்துட்டா. கல்யாணம் நல்லபடியா நடக்கணும்னு உங்கம்மா அங்காளம்மன் கோவில்ல அங்கபிரதட்சணம் பண்ணினா. இந்தாம்மா... இது உன் கல்யாணத்துக்காக வாங்கின மாங்கல்யம். அம்மன் மடியில் வச்சு அர்ச்சனை பண்ணினோம். இதைக் கொண்டுபோய் பூஜையறையிலே வை!"

அப்பா, அடுத்துப் பேசின எதுவும் அவள் காதில் விழவில்லை. அடியோடு ஸ்தம்பித்துப்போயிருந்தாள், அஸ்வினி.

## 10

**மு**ன்னரே நிச்சயித்தபடி கோபி– அஸ்வினி திருமணம் விமரிசையாக நடந்தது.

'அஸ்வினிக்கு இப்படியொரு ராஜவாழ்க்கையா?' என்று அவளின் சொந்தபந்தங்கள் வியந்தன.

அமுதா, பரத்துடன் திருமணத்திற்கு வந்திருந்தாள். மணக்கோலத்தில் அமர்ந்திருந்த அஸ்வினியை பரத் கண்ணீருடன் பார்த்துக்கொண்டிருந்தான். அதற்கடுத்த வாரமே அவர்கள் இருவருக்கும் திருமணம்.

முதலிரவு!

கோபி, அஸ்வினிக்காக காத்திருந்தான்.

தடதடக்கும் நெஞ்சுடன் வந்தவள், அவன் காலில் விழ

முயன்றாள்.

அவளைத் தடுத்து பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டவன், சொன்னான்: "எனக்கு இதெல்லாம் பிடிக்காது."

"........."

"உன்கிட்டே எனக்குப் பிடிச்சதே, இந்த வெட்கமும், தயக்கமும், அடக்கமும்தான். பெண்கள் இப்படிதான் இருக்கணும். இதுதான் அவர்களுக்கு அழகு!"

சூடிழுத்தது போலிருந்தது அஸ்வினிக்கு. சட்டென தலை உயர்த்திப் பார்த்தாள்.

"உன் கண்கள் ரொம்ப அழகு அஸ்வினி. உன்னைப் பார்த்ததுமே எனக்கு ரொம்ப பிடிச்சுபோச்சு. நான் இதுவரைக்கும் எந்தப் பெண்ணையும் காதலிச்சதே இல்லே! அப்பாவுக்கு என்மேலே ரொம்ப பாசம். எனக்கு என்னவெல்லாம் வேணும்ங்கிறது அவருக்குத்தான் தெரியும். அதனாலதான் என் மனைவியைத் தேர்வு பண்ணுற முழு உரிமையையும், அவர்கிட்டேயே ஒப்படைச்சிட்டேன்..."

"........."

எங்ககிட்டே பணத்துக்கு குறைச்சல் இல்லே. நல்ல, அடக்கமான, பண்புள்ள பெண்ணா, அடங்கி நடக்கிற பெண்ணுதான் இந்த வீட்டுக்கு மருமகளா வரணும்னு தேடினார். நீ கிடைச்சே."

அஸ்வினிக்கு கண்களில் நீர் திரண்டது. 'இதற்கெல்லாம் நான் தகுதியானவள்தானா?'

"நாமெல்லாரும் கொடைக்கானலுக்கு போயிருந்தப்ப உன்கிட்டே மனசுவிட்டு நிறைய பேசணும்னு ஆசைப் பட்டேன். ஆனா, உனக்கு காய்ச்சல் வந்து ஊருக்கு திரும்ப வேண்டியதாயிடுச்சு! உனக்கு ஏன் காய்ச்சல் வந்ததுன்னு எனக்குத் தெரியும்!"

"தெ... தெரியுமா? எ... எப்படி?"



"கல்யாணத்துக்கு முன்னாடியே நான் உன்னை தொட்டுடுவேனோங்கிற பயம்தானே? அதனாலதானே?"

அதற்குமேல் அவளால் தாங்க முடியவில்லை. 'சொல்லி விடலாமா? என் மீது இவ்வளவு நம்பிக்கையும், பாசமும் வைத்திருக்கிறாரே! இவரை ஏமாற்றுவது துரோகமல்லவா?'

"எ... என்னை மன்னிச்சிடுங்க!"

"சே... ஏம்மா அழுறே? கட்டிக்கப்போறவனா இருந்தாலும், அந்த விஷயத்தில் அந்நியனா நினைக்கிற இந்த நெருப்பு குணம் எல்லாப் பெண்களுக்கும் அவசியம். தாம்பத்தியம்ங்கிறது செக்ஸ் மட்டுமே சம்பந்தப்பட்டது இல்லை."

"........."

"முதல்ல ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுகிட்டு, அதுக்குப் பிறகு ஒண்ணா சேரணும். நீ மனசளவில் இன்னும் குழந்தையா இருக்கிறே. ஒரு பயம் இருக்கு. அதெல்லாம் குறையணும். பரஸ்பரம் நல்லா புரிஞ்சுகிட்டு நீ தெளிவான பிறகுதான் மத்ததெல்லாம். அதுவரைக்கும் நான் காத்திருப்பேன்... பயப்படாதே. ரொம்ப களைப்பா இருக்கு. தூங்கு!" ஒரு குழந்தையிடம் தாய் காட்டும் பரிவைப் போல் இருந்தது அவன் அன்பு.

அந்த அன்[illegible] அவளை சித்திரவதை செய்தது.

பல இரவுகள் அவனறியாமல் தலையணை நனைத்தாள்.

நாளாக... ஆக... அவன் காட்டும் அன்பு உறுத்தியது. இதயத்தைக் குத்திக் கிழித்தது.

'இப்படியொரு கணவன் கிடைக்க பெண்கள், எத்தனை கோவில்களைச் சுற்றுகின்றனர்? ஆனால், எந்த தவமும் செய்யாமலேயே கடவுள் எனக்குக் கொடுத்த அருமையான வரமல்லவா என் கணவன்! அந்தத் தவறு மட்டும் நடக்காமல் இருந்தால் எவ்வளவு ஆனந்தமாய் இருந்திருப்பேன்?'

'தெரிஞ்சோ, தெரியாமலோ பெரிய தவறு செய்து

விட்டேன். என்னை மன்னித்துவிடு கடவுளே! என்னால் இனி என் கணவரை எந்தக் காரணத்திற்காகவும் பிரிய முடியாது. அவருடன் எந்த உறுத்தலுமின்றி குடும்பம் நடத்த ஆசைப்படுகிறேன். அதற்கான தைரியத்தை எனக்குக் கொடு!' கண்ணீர்விட்டு அழுதாள்.

கோபியுடன் மகிழ்ச்சியாய்க் குடும்பம் நடத்தினாள். தயாளனுக்கும் அஸ்வினியை மிகவும் பிடித்துப்போனது. மகளைப் போல் பாசம் காட்டினார்.

இரண்டு தெரு தள்ளியே பரத் வீடு இருந்ததால் அமுதாவும், அஸ்வினியும் தினமும் சந்தித்துக்கொண்டனர். வாழ்க்கைப் பயணம் சீராக ஓடிக்கொண்டிருந்தது.

திருமணமாகி ஒரு மாதம் ஆனது.

அன்று காலையில் எழுந்ததில் இருந்தே அஸ்வினிக்கு தலையைச் சுற்றியது... குமட்டியது.

அடிவயிற்றிலிருந்து பீரிட்டு வாந்தி எடுத்தாள்.

பதறிப்போனான், கோபி.

"என்னாச்சு அஸ்வினி?"

"தெரியலீங்க... தலைசுத்துது..."

கோபி உடனே போன் பண்ணி மருத்துவரை வரவழைத்தான்.

தயாளனும் மருமகளுக்கு என்னவோ ஏதோ என்று துடித்துவிட்டார்.

அவளைப் பரிசோதித்த மருத்துவர் பங்கஜம், முகம் மலர, அஸ்வினியின் கன்னத்தில் செல்லமாய்த் தட்டினார்.

"அம்மாவாகப் போகிறே அஸ்வினி. அதுக்குத்தான் இத்தனை ஆர்ப்பாட்டமும்."

"எ... என்ன... நான் தாயாகப் போகிறேனா?" வயிற்றைத் தொட்டுப் பார்த்து பூரித்துப்போனாள்.

"என்ன டாக்டர்?" புரியாமல் பார்த்தான்.



"வாழ்த்துகள் கோபி."

"எதுக்கு?"

"நீங்க அப்பாவாகப் போறீங்க!"

"உண்மையாவா?" நம்பமுடியாத இன்ப அதிர்ச்சியில் கண்கள் விரிந்தன.

"ஆமா!"

"நன்றி டாக்டர்... எவ்வளவு பெரிய செய்தி சொல்லி இருக்கீங்க! உங்களுக்குத்தான் முதல் இனிப்பு தரணும்."

முகம் கொள்ளாத சிரிப்புடன் வெளியே வந்தார், மருத்துவர்.

"உங்க அப்பா எங்கே?"

"மருமகளுக்கு ஏதும் ஆகிடக்கூடாதுன்னு சாமிகிட்டே மனு கொடுக்க பூஜையறைக்குப் போனார்! நான் என் அஸ்வினியைப் பார்க்கலாமா டாக்டர்?"

"தாராளமா போய்ப் பாருங்க. நான் உங்கப்பாவைப் பார்த்திட்டு வர்றேன். அப்புறம் கோபி, சாயங்காலம் அஸ்வினியை என் 'கிளினிக்'கிற்கு அழைச்சிட்டு வாங்க."

"சரி டாக்டர்" என்றவன், அவசரமாய் அறைக்கு ஓடினான்.

உள்ளே நுழைந்த வேகத்தில் அஸ்வினியை அப்படியே தூக்கினான்.

"விடுங்க... விடுங்க... என்ன இது சின்னப் பிள்ளையாட்டம்?" செல்லமாய்ச் சிணுங்கினாள்.

"மகிழ்ச்சியில் தலைகால் புரியலே அஸ்வினி! எவ்வளவு பெரிய தித்திப்பைக் கொடுத்திருக்கே தெரியுமா? அதுவும் ரெண்டே மாசத்தில்!" முத்தத்தால் அவள் முகமெங்கும் எச்சில்படுத்தினான்.

கோபியின் கேசத்திற்குள் கையைவிட்டுக் கலைத்து விட்டவள், அன்பின் மிகுதியில் அவன் நெற்றியில் இதழ் பதித்தாள்.

"நன்றி."

"நன்றியா... எதுக்கு?"

"என்னை அம்மா ஆக்கினதுக்கு?"

"எனக்கொரு ஆசை அஸ்வினி!"

"என்ன... சொல்லுங்க."

"ஆண்டுக்கு ஒரு குழந்தைன்னு டஜன் குழந்தைகள் பெத்து தருவியா?"

"ஒரு டஜனா? அம்மாடி... என்னால முடியாது!"

"எனக்குக் குழந்தைன்னா உயிர்."

"அதுக்காக? ஏதோ ஆறேழுன்னா பரவாயில்லே... ஒரேயடியா டஜன்கணக்கிலேன்னா நான் என்னாவது?"

கணவனும், மனைவியும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருக்க...

"கோபி..." என்ற மருத்துவர் பங்கஜத்தின் குரல் அந்த பங்களா முழுக்க எதிரொலித்தது.

கோபியும், அஸ்வினியும் என்னவோ ஏதோவென்று பதறியபடி ஓடினர்.

அங்கு தயாளன் தரையில் சரிந்திருக்க, பதற்றத்துடன் அவரின் நாடித்துடிப்பை ஆராய்ந்துகொண்டிருந்தாள், பங்கஜம்.

"டாக்டர்... அப்பாவுக்கு என்னாச்சு?"

"மாமா... மாமா..." –அஸ்வினி அழைத்தாள்.

"நீங்க தாத்தாவாகப் போறீங்கன்னு சொன்னேன். அவருக்கு நெஞ்சுவலி வந்திடுச்சு. உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணும்!"

"கடவுளே..." என்றபடி அவ்ரைத் தூக்கிக்கொண்டு காருக்கு ஓடினான், கோபி.

ஆனால், தயாளனின் உயிர் எப்போதோ பறந்துவிட்டது.



# 11

**கோ**பி இடிந்துபோய்விட்டான்.

அமுதா, அஸ்வினிக்கு ஆறுதல் சொன்னாள்.

தயாளனின் மரணம் காரணமாக அஸ்வினி மருத்துவப் பரிசோதனைக்குப் போகாமல் இருந்தாள்.

இருவரும் கொஞ்சம் கொஞ்சமாக தேறிவர ஒரு மாதமாயிற்று.

கோபிதான் நினைவுபடுத்தினான். "இன்னைக்கு டாக்டரிடம் போய் வரலாம் அஸ்வினி!"

"மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்குங்க. நம்ம குடும்ப வாரிசைப் பார்க்காமலேயே மாமா போயிட்டாரே..."

பெருமூச்சுவிட்டான், கோபி.

"விதி கொடியது. வேறென்ன சொல்ல? அதைப்பற்றிப் பேசி இனி என்ன ஆகப்போகிறது? சாயங்காலம் தயாரா இரு. நான் வந்திடுறேன்!"

"ஒரு மாசமா ஆபீஸ் பக்கமே போகலை. ஏகப்பட்ட வேலை இருக்கும். நீங்க அதைக் கவனியுங்க. கிளினிக் இதோ பக்கத்திலேதானே? நானே போயிட்டு வந்திடுறேன்."

"இல்லை... நான் என்ன சொல்றேன்னா..."

"விடுங்க... உடம்பைப் போட்டு அலட்டிக்காதீங்க. வீட்டுல கார் இருக்கு. டிரைவர் இருக்கார். அப்புறமென்ன?"

சற்றே யோசித்த கோபி, பிறகு "சரி" என்றான்.

மாலையில் அஸ்வினி, மருத்துவர் பங்கஜத்தைச் சென்று பார்த்தாள்.

தயாளனின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்த பங்கஜம், பரிசோதனைக்கு இரத்தம் முதலானவற்றை எடுத்துக்கொண்டு

மறுநாள் வரச்சொல்லி அஸ்வினியை அனுப்பி வைத்தார்.

வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது [illegible] இனிப்புடன் காத்திருந்தாள், அமுதா.

"எடுத்துக்க அஸ்வினி!"

"எதுக்கு இனிப்பு?"

"முதல்ல சாப்பிடு. சொல்றேன்!"

எடுத்து சாப்பிட்டாள்.

"இப்ப சொல்லு... என்ன விசயம்?"

"இந்த விசயத்திலும் நமக்குள்ளே எவ்வளவு ஒற்றுமை?"

"எந்த விசயத்தில்?"

"நானும் அம்மாவாகி இருக்கிறேன் அஸ்வினி!" முகம் பளபளக்க, நாணம் தந்த செம்மை கன்னக்கதுப்பில் கோலம் போட... அமுதா சொன்னாள்.

பூரித்துப்போனாள், அஸ்வினி.

மாமனாரின் மறைவால் நிலைபெற்றிருந்த வேதனை முழுக்க அகன்றது போலிருக்க, தோழியை இறுக அணைத்தாள்.

"எத்தனை மகிழ்ச்சியான செய்தி? உங்க அம்மா, அப்பாவுக்கு சொல்லிட்டியா?"

"இல்லை. இன்னும் பரத்துக்கே தெரியாது. உனக்குத்தான் முதல்ல சொல்லணும்னு தோணுச்சு."

"அ...மு...தா..." நெகிழ்ச்சியில் கண்ணீர் துளிர்க்க, முன்னிலும் இறுக்கமாய் அவளை அணைத்துக்கொண்டாள்.

"உஷ்..." என்று உதட்டில் விரல் வைத்தபடி சுவற்றில் அமர்ந்திருந்த 'கொழு கொழு' குழந்தை படத்தை ஆசையுடன் பார்த்தாள், அஸ்வினி.

அவளுடைய பரிசோதனை முடிவுகளை எடுத்து வந்த



பங்கஜம் புன்சிரிப்புடன் அவள் எதிரில் அமர்ந்தாள்.

"கர்ப்பம் உறுதியாயிடுச்சு, அஸ்வினி. வாழ்த்துகள்."

"நன்றி டாக்டர்."

"ஆனா, உன் உடம்புதான் கொஞ்சம் பலவீனமா இருக்கு. கருப்பையும் அப்படிதான் இருக்கு. நான் எழுதித் தர்ற மருந்தையெல்லாம் வேளை தவறாம சாப்பிடு."

"என்ன சொல்றீங்க டாக்டர்? குழந்தைக்கு...?"

"குழந்தைக்கு எந்தப் பிரச்சினையும் வராது. ஆனா, இதே நிலை நீடிச்சா... ஒரு குழந்தைக்குமேல் உன்னால் பெத்துக்க முடியாது. பயப்படாதே... நான் தர்ற மருந்தைச் சாப்பிடு... போதும்! ஆமா... உனக்குக் கல்யாணமாகி எத்தனை மாசமாகுது?"

"ரெண்டு மாசம் டாக்டர்!"

"ரெண்டு மாசமா?" நெற்றியில் கோடுகள் விழ அவளைப் பார்த்தாள், பங்கஜம்.

"காதல் கல்யாணமா?"

"இல்லை... வீட்டுல பார்த்து முடிவு செய்ததுதான். ஏன் கேக்கிறீங்க டாக்டர்?"

"அப்ப... கல்யாணத்துக்கு முன்னாடியே உன் கணவரோடு வெளியே போயிருக்கே! என் கணிப்பு சரியா?"

"ஆமா டாக்டர்!"

"அப்ப நான் நினைச்சது சரிதான்."

"என்னாச்சு டாக்டர்?" புரியாமல் விழித்தாள்.

"கல்யாணத்துக்கு முன்னாடியே அவசரப்பட்டுட்டீங்க" என்றாள், குறும்புடன்.

"........."

"நீ இப்ப மூணு மாசம் கர்ப்பமா இருக்கே."

"டா...டா...க்...ட...ர்..." அஸ்வினி அதை எதிர்

பார்க்கவில்லை.

பெரிதும் அதிர்ந்தாள்.

தலைவலி மண்டையைப் பிளந்தது.

தன் மீது தனக்கே வெறுப்பாய் இருந்தது.

'எல்லாவற்றையும் மறந்து கோபியுடன் நிம்மதியாய் வாழ்ந்துகொண்டிருக்கும்' இப்படியொரு வெடிகுண்டு என் வாழ்க்கையில் வந்து விழணுமா?

'பரத்தின் குழந்தை என் வயிற்றில்! சே... எனக்கு ஏனிந்த தண்டனை?'

'கோபிக்குத் தெரிந்தால் என்னாகும்? இல்ல... தெரியக்கூடாது. என் அன்பான கணவர் எனக்கு வேண்டும். அவருடன் நூறு வயசுவரை நான் வாழ்ந்தாக வேண்டும். நான் சுமந்துகொண்டிருப்பது களங்கம். இது எனக்கு வேண்டாம்.'

அஸ்வினி அவ்வளவு மன உளைச்சலிலும் புத்திசாலித்தனமாக ஒரு காரியத்தைச் செய்துவிட்டே வந்தாள்.

"டாக்டர்... நானும் என் கணவரும் திருமணத்திற்கு முன்பே அவசரப்பட்டுட்டோம். இது யாருக்கும் தெரியாது. ஆனால், அது இப்படி ஆகும்னு நான் நினைக்கலை. அவர்கிட்டே இதைப்பற்றிக் கேட்காதீங்க, சங்கடப்படுவார். தவிர, யார் கேட்டாலும் இப்ப நான் ரெண்டு மாச கர்ப்பம்னு சொல்லுங்க டாக்டர்!"

"இதிலே சங்கடப்பட என்ன இருக்கு?"

"பிளீஸ் டாக்டர்... அவர், தன்னைப் பற்றி யாரும் குறைச்சு மதிப்பிடக்கூடாதுங்கறதுல கவனமா இருக்கிறவர். அதான்... கேட்டுடாதீங்க" என்றாள், தயவாய்.

"சரி... அதுக்கேன் பதற்றப்படுறே?" என்று சமாதானமாய் அனுப்பி வைத்தாள், பங்கஜம்.

"என்ன அஸ்வினி? டாக்டர் என்ன சொன்னார்?" வரும்போதே கேட்டுக்கொண்டே வந்தான், கோபி.



"........"

"அஸ்வினி... உன்னைத்தான்!" சுவரையே வெறித்துக்கொண்டிருந்தவளைத் தொட்டு அசைத்தான்.

"அ... எப்ப வந்தீங்க?"

"போச்சுடா! உனக்கு என்னாச்சு? பிறக்கப்போகிற குழந்தையைப் பற்றி கனவு காணத் தொடங்கிட்டியா! எனக்கும் குழந்தையை எப்படா பார்ப்போம்னு இருக்கு. டாக்டர் என்ன சொன்னாங்க?"

"எல்லாமே நல்லா இருக்குன்னு சொல்லிட்டார்!"

"நல்லது. இனி, நீ மாடிப்படியிலிருந்து வேகமா இறங்கி ஓடிவரக்கூடாது. நல்லா ஓய்வு எடுக்கணும்... சரியா?"

"ச... சரிங்க!" எச்சிலை விழுங்கினாள், அஸ்வினி.

சுப்ரியா மருத்துவமனை.

ஆட்டோவிலிருந்து அஸ்வினி இறங்கினாள். பொங்கிய வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்தாள். அக்கம்பக்கம் பார்த்தபடி விரைந்து நடந்தாள்.

முன்னரே அனுமதி வாங்கியிருந்ததால், மருத்துவர் சுப்ரியாவை உடனே சந்திக்க முடிந்தது.

சுப்ரியா, முப்பதைத் தாண்டாதவர்.

அஸ்வினியை ஆராய்ந்தார்.

"பொதுவா இந்த மாதிரி விசயங்களுக்காக, கல்லூரியில் படிக்கிற பெண்களும், நடிகைகளும்தான் வருவாங்க. உங்களைப் பார்த்தா நல்ல குடும்பத்துப் பொண்ணா தெரியுது. கல்யாணமானவங்களா இருக்கீங்க. ஏன் கருக் கலைப்பு பண்ணணும்னு முடிவெடுத்தீங்க?"

"அது... வந்து... எங்களுக்கு கல்யாணமாகி மூணு மாசம் தான் ஆகுது. நாங்க தேனிலவுக்கு போகலாம்னு இருக்கோம். ரெண்டு ஆண்டுக்கு குழந்தை வேணாம்னு நினைச்சிருந்தோம்.

பாதுகாப்பாதான் இருந்தோம். அப்படியும் மீறி..."

"சரி... அதுக்காக, கடவுள் கொடுத்ததை ஏன் அழிக்கப் பார்க்கிறீங்க? இப்படியொரு பாக்கியம் கிடைக்காம எத்தனை பெண்கள் வாழாவெட்டியா பிறந்த வீட்டுக்கே அனுப்பப் படுறாங்க தெரியுமா?"

"டாக்டர் பிளீஸ்" மறுபடியும் கெஞ்சினாள்.

சுப்ரியா அவளைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினார்.

"இல்ல... குழந்தை நல்லா இருக்கு. கலைக்க முடியாது. மீறி பண்ணினா உங்க உயிருக்குக்கூட ஆபத்தா முடியும்!"

"அப்ப... அப்ப..."

"வேற வழியே இல்லே!"

சற்று நேரம் கழித்து... கண்களைத் துடைத்தபடி தலை கவிழ்ந்து வேகமாய் வெளியேறியவளை, வரவேற்பில் நின்றிருந்த பரத் பார்த்துவிட்டான்.

பரத்திற்கு உறக்கம் வரவில்லை.

சுப்ரியா, அவனுடைய கல்லூரித் தோழி. அவ்வப்போது சந்தித்துக்கொள்வதுண்டு. இன்றும் அவளைப் பார்க்கப் போன இடத்தில் எதேச்சையாக அஸ்வினியைப் பார்த்து விட்டான்.

சுப்ரியாவிடம் அவள் தனக்குத் தெரிந்த பெண் என்று கூறினான். அவளைப் பற்றிய தகவலைப் பெற பெரிய சிரமம் ஏற்படவில்லை.

'மூன்று மாத கரு என்றால்? அந்தக் குழந்தை... என் குழந்தையா? கடவுளே! அதனால்தான் அதைக் கலைக்க வந்திருக்கிறாள். பாவம், அஸ்வினி! என்னால், என் அவசரத்தால் அவள் எவ்வளவு சங்கடங்களை அனுபவிக் கிறாள்?'

'கடவுளே... அவளுக்கு வாழ்க்கையில் நிம்மதியைக் கொடு!



கோபியுடன் அவள் என்றென்றும் மனநிறைவாக வாழ வேண்டும். அதற்கு பிராயச்சித்தமாக என் உயிரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்' –மனப்பூர்வமாய் இறைஞ்சினான்.

## 12

அஸ்வினிக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது.

கோபி மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்துபோனான்.

பெயர் சூட்டும் விழாவிற்கு ஊரைக் கூட்டி விருந்து வைத்தான்.

குழந்தையைப் பரத் பாசத்துடன் தூக்கி அரவணைத்துக் கொண்டான். கழுத்தில் தங்கச் சங்கிலி போட்டான்.

குழந்தைக்கு 'வத்சன்' என்று பெயரிட்டனர்.

"ஒன்பது மாசத்திலேயே பிறந்தாலும் என் பையனைப் பாரு... சும்மா கொழுக்... மொழுக்குன்னு இல்லே?" என்று கொஞ்சுவான், கோபி.

அமைதியாகப் புன்னகைத்த அஸ்வினியை ஆச்சரியமாகப் பார்த்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க?"

"உன்கிட்டேருந்து நான் எதிர்பார்த்த பதில் வரலே!"

"என்ன பதில்?"

"பொதுவா நான் பேசினதுக்கு... 'ஏன் குழந்தை மேலே கண்ணு வைக்கிறீங்கன்னு' யாராயிருந்தாலும் சொல்லி இருப்பாங்க."

"இல்ல... நான் கவனிக்கலே!"

"எங்கப்பா இறந்ததிலேருந்து உன் முகத்துல சிரிப்பு

இல்லை. கவலைப்படாதே அஸ்வினி. இதோ எங்கப்பாவே வந்து பிறந்திட்டார். நான் அப்படித்தான் நினைக்கிறேன். குழந்தையைப் பத்திரமா கவனிச்சுக்கணும்" என்று புறப்பட்டான்.

இந்தக் குழந்தையை கர்ப்பத்தில் வேண்டாவெறுப்பாய் சுமந்ததென்னவோ உண்மை. பிறந்தபின்பும், இது பரத்தோட குழந்தை என்கிற எண்ணமே ரம்பமாய் அறுத்தது.

ஆனால், நாளாக, ஆக, அக்குழந்தை அவள் முகம் பார்த்து சிரிக்கும் சிரிப்பில் மனசு இளகத் தொடங்கி இருந்தாள்.

ஆனால்,பரத் அடிக்கடி அவள் வீட்டிற்கு வந்து குழந்தையை கொஞ்சிவிட்டு செல்வதுதான் உறுத்தியது.

'ஒருவேளை அவனுக்குத் தெரிந்திருக்குமோ?'

'இல்லை... அதுக்கு வாய்ப்பே இல்லை' —தன்னைத் தானே சமாதானப்படுத்திக்கொண்டாள்.

சரியாய் ஒரு மாதம் கழித்து அமுதாவிற்கு பெண் குழந்தை பிறந்தது.

என்றபோதிலும் பரத், வத்சனைக் கொஞ்சிவிட்டுச் செல்வதை வழக்கப்படுத்தினான். இதனால் கோபிக்கு அவன் மேல் இன்னும் பிடிப்பு அதிகமாகி நட்பு இறுகியது.

அஸ்வினிதான் தத்தளித்தாள்.

**கா**லங்கள் உருண்டோடின.

குழந்தைக்கு நான்கு வயது.

பரத்தும், அமுதாவும் குழந்தை பிரியாவுடன் கோபியின் வீட்டிற்கு வந்திருந்தனர்.

குழந்தைகள் இருவரும் விளையாடிக்கொண்டிருந்தனர். வத்சன், சோபாவிலிருந்து பிரியாவைத் தள்ளிவிட, கீழே விழுந்த பிரியா குரலெடுத்து அழுதாள்.

கோபிக்கு கோபம் வந்துவிட்டது.



வத்சனை இழுத்து வைத்து நாலு அடி வைக்க... அவன் வீரிட்டு அழத் தொடங்கினான்.

"உங்கம்மா உனக்கு ரொம்ப செல்லம் கொடுத்து கெடுத்து வச்சிருக்கா. கை நீளமாயிடுச்சு" என்று மறுபடி அடிக்க முற்பட, ஆவேசத்துடன் வத்சனைத் தன்னருகே இழுத்துக் கொண்டு கோபியை முறைத்தான், பரத்.

"என்ன பண்ணுறீங்கன்னு தெரிஞ்சுதான் பண்ணுறீங்களா? பச்சைக் குழந்தையைப் போட்டு இப்படி அடிக்கிறீங்க?"

அவன் முகத்தில் தெரிந்த கோபம், ஆவேசம், பரிதவிப்பு எல்லாம் கோபியை ஆச்சரியப்படுத்தின.

"பரத்!" என்றான், வியப்பாய்.

சூழ்நிலையை உணர்ந்த பரத், சங்கடத்துடன் அவன் கையைத் தட்டிக் கொடுத்தான்.

"இல்ல கோபி... எனக்குக் குழந்தைகள்னா உயிர். அடிச்சா பொறுத்துக்கமாட்டேன். அதான்..."

"நான் அப்படி அடிச்சது தப்புதான்."

அஸ்வினிக்கும் அவன் செய்கை, குழப்பத்தை விளைவித்தது.

அமுதா சிரித்தாள்.

"பரத்துக்கு பிரியாமேல் இருக்கிற பாசத்தைவிட வத்சன் மேலதான் பாசம் அதிகம். என்னா, வருங்கால மருமகன் இல்லையா?"

அஸ்வினியும், பரத்தும் ஒருசேர அதிர்ந்தார்கள்.

"என்ன உளறுறே?" என்றாள், அஸ்வினி.

"ஏன் அஸ்வினி? அப்படிப் பேசினது தப்பா?"

"தப்புதான்! நீயும் நானும் நட்பா, ஒரு தாய் வயிற்றில் பிறந்த குழந்தைங்க மாதிரியில்லே பழகினோம்? அப்படின்னா என் குழந்தையும், உன் குழந்தையும் அண்ணன்– தங்கை

இல்லையா? எ... என்ன நான் சொல்றது?"

"ஓ... நீ அப்படி வர்றியா? ஆமா... நான்தான் தப்பாப் பேசிட்டேன்" என்றாள், அமுதா.

அஸ்வினிக்கும், பரத்திற்கும் ஒரு பெரிய பிரச்சினை தீர்ந்த நிம்மதி.

**கோ**பியின் செல்போன் சிணுங்கியது.

"அலோ..."

"அலோ... நான் வெங்கட். எப்படியிருக்கே கோபி?"

"டாக்டர் வெங்கட்டா?"

"ஆமா."

"எப்படா வந்தே கலிபோர்னியாவிலேருந்து?"

"போன வாரம்."

"ஒண்ணுகூட விட்டுவைக்காம எல்லாத்தையும் படிச்சு கரைச்சு குடிச்சிடணும்னு முடிவு பண்ணிட்டியா?"

"ஆமா... ஏழைகளுக்கும் உதவுற மாதிரி மிகக் குறைந்த செலவில் பிளாஸ்டிக் சர்ஜரி செய்யறதுக்கும் படிச்சு முடிச்சிட்டேன்."

"கலிபோர்னியாவுக்குப் போய் நாலு ஆண்டு இருக்குமா?"

"மேலேயே இருக்கும்!"

"வரும்போது உங்கப்பா அம்மாவுக்காக மேல்நாட்டு மருமகள் யாரையாவது அழைச்சிட்டு வந்தியா?"

"உதைப்படுவே! கோபி, நம்மூர் பொண்ணுங்க ஒரு தெய்வீக அழகு. என்னதான் சொல்லு... கண்ணை உறுத்துற பளிச் நிறம், சீக்கிரமே அலுத்துப்போயிடும். இப்ப எனக்கு இங்கே பொண்ணு தேடிக்கிட்டிருக்காங்க."

"உன் மனசுப்படி நல்ல மனைவி அமையட்டும்."

"உனக்கு கல்யாணமாயிடுச்சில்லே? என்னாலதான்



கலந்துக்க முடியாமப் போயிடுச்சு. எப்படி... உன் வாழ்க்கை, பிரச்சினையில்லாமல் போகுதா?"

"எல்லாத்தையும் போன்லேயே சொல்லிடணுமா? நேரில் பேசிக்கலாம். வீட்டுக்கு வாயேன்."

"வீட்டுக்கு இன்னொரு நாளைக்கு வர்றேன். நாம வெளியே சந்திப்போம்! நிறைய பேசணும்!"

"எப்ப சந்திக்கலாம்?"

"இப்பவே... இன்னைக்கே" என்றவன், ஓட்டல் பெயரைச் சொன்னான்.

"சரி! வந்திடுறேன்."

**வெ**ங்கட்டும், கோபியும், மதுவை மெல்ல உறிஞ்சியபடி பேசிக்கொண்டிருந்தனர்.

"உங்கப்பா இறந்துபோன விசயம் இப்ப... நீ சொல்லிதான் தெரியும். உன்மேல உயிரையே வச்சிட்டிருந்தார். உனக்கு விபத்து ஏற்பட்டப்ப எப்படி துடிச்சிப்போயிட்டார் தெரியுமா?"

வெங்கட், அப்பாவைப் பற்றி பேசவும், கோபிக்கு பழைய நினைவுகளில் இமைகள் ஈரமாயின.

"கடைசியில் என் குழந்தையோட முகத்தைக்கூட பார்க்காமப் போயிட்டார்!"

"குழந்தையா? தத்து எடுத்துக்கிட்டியா என்ன? பரவாயில்லையே... நல்ல காரியமெல்லாம் பண்ணி இருக்கியே..."

"தத்தா? நான் ஏன் தத்தெடுக்கணும்?"

"பின்னே... உன் குழந்தையா?"

"என்னடா பைத்தியக்காரன் மாதிரி பேசுறே? என் குழந்தைதான்!"

"அதெப்படி? வாய்ப்பே இல்லையே!" தயாளனுக்கு

பண்ணிக் கொடுத்த சத்தியத்தைப் போதையில் பறக்க விட்டான்.

"ஏய்... குடிச்சிட்டு உளறுறியா?" கோபிக்கு கோபம் வெளிப்பட்டது.

"டேய்... இதைவிட சூப்பர் சரக்கெல்லாம் சாப்பிட்டவன். நான் ஏன் உளறணும்?"

"அப்ப... நீ பேசுறதுக்கு என்ன அர்த்தம்?"

"உன்னால இந்தப் பிறவியில் ஒரு குழந்தைக்கு அப்பாவாக முடியாதுங்கிற அர்த்தம்!"

"ராஸ்கல்..." பீரிட்டு வந்த கோபத்தில் பளாரென அறைந்தான்.

வெங்கட்டுக்கு ஏறியிருந்த போதையெல்லாம் இறங்கியது.

சூழ்நிலை புரிந்தது.

அவசரப்பட்டு உண்மையை உளறிவிட்ட தன்னை நொந்துகொண்டான்.

"மன்னிச்சிடு கோபி... வா... வீட்டுக்குப் போகலாம்!"

"இல்லை... நீ எதையோ மறைக்கிறே... ஏன் அப்படிப் பேசினே? சொல்லு!"

வெங்கட் சற்று நேரம் அவனையே பார்த்தான்.

'இனி மறைத்துப் பயனில்லை. மருத்துவரிடம் போய் சோதித்துக்கொண்டால் உண்மை தெரிந்துவிடும். அதைவிட நாமே இதமாய் எடுத்துச் சொல்வது நல்லது!' பெருமூச்சுடன் உண்மையைச் சொல்லத் தொடங்கினான்.

"மனசை திடப்படுத்திக்க கோபி! விபத்தில் சிக்கிய நீ, அப்பா ஆகிற ஆற்றலை இழந்திட்டே... உன்னால ஒரு பெண்ணுக்கு சுகத்தைத் தரமுடியுமே தவிர, குழந்தையைத் தரமுடியாது..." என்று சொன்னதோடு, தயாளனிடம்



இதுபற்றி சத்தியம் செய்தது வரை எல்லாவற்றையும் கூறினான்.

கோபி வெலவெலத்துப் போனான்.

"கல்யாணமாகி குழந்தை பிறக்காது. அதனால நீ எப்படியும் மருத்துவ பரிசோதனையில் உண்மையைத் தெரிஞ்சிக்குவேன்னு நினைச்சேன். இப்ப உண்மையைப் போட்டு உடைச்சிட்டேன்..."

"........."

"ஆனா, இப்பவும் சொல்றேன். எந்த மருத்துவத்தாலும் உன் குறையை நிவர்த்தி பண்ண முடியாது. ஆனா, குழந்தை பிறந்தது எப்படி? அதுதான் எனக்குப் புரியலை... ஒரு விசயத்திலே மட்டும் நம்பிக்கை வை! நடக்கிறதெல்லாம் நன்மைக்கே... அவசரப்பட்டு முடிவெடுத்து யாரையும் தண்டிச்சிடாதே! நான் என்ன சொல்ல வர்றேங்கிறது உனக்குப் புரியும்னு நினைக்கிறேன்."

கோபி... உள்ளுக்குள் வெடித்துச் சிதறிக்கொண்டிருந்தான்.

பெங்களூரிலுள்ள ஓட்டல்.

விட்டத்தையே வெறித்துப் பார்த்தபடி படுத்திருந்தான், கோபி.

தொழில் விசயமாக ஐதராபாத் போகிறேன் என்று பொய் சொல்லிவிட்டு பெங்களூர் வந்து மூன்று நாளாகி விட்டது.

மனசு வலிக்க... வலிக்க... அதைக் கட்டுப்படுத்த நிறைய குடித்தான்.

யோசித்துப் பார்த்ததில்... ஒவ்வொன்றாய்ப் புரியத் தொடங்கியது.

நான்கைந்து முறை... நள்ளிரவில் அஸ்வினி கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தது... கேட்டதற்கு மாமாவை நினைத்து

அழுகிறேன் என்றது. தொடக்கத்தில் தன்னுடன் ஒட்டாமல் வாழ்ந்தது நினைவிற்கு வர, மருத்துவர் பங்கஜத்திற்கு போன் பண்ணி பேச்சுக் கொடுத்தான்.

குழந்தை பத்து மாதத்தில் பிறந்ததை அறிந்துகொண்டான்.

ஆக அவள் யாரையோ காதலித்து அவனிடம் தன்னை இழந்திருக்கிறாள்.

'அஸ்வினி... நீயா இப்படி? என்னை ஏமாற்ற எப்படி மனசு வந்தது உனக்கு? எனக்கு இப்படியொரு குறை இருப்பது தெரிந்திருந்தால்... உன் அயோக்கியத்தனம் வெளியில் தெரிந்திருக்கும். அதனால்தான் குழந்தையைச் சுமந்திருந்த பத்து மாதமும் எதையோ இழந்தது போல் இருந்தாயா? சே... என் வாழ்க்கையைப் பாழாக்கிவிட்டாயே! உன்மேல் எவ்வளவு அன்பு வைத்திருந்தேன். ஏமாற்றி விட்டாயே! அதனால்தான் நீ கர்ப்பமாய் இருக்கிறாய் என்று தெரிந்ததும் அப்பா அதிர்ச்சியில் உயிரை விட்டாரா?' வாய்விட்டு அழுதான்.

'கோபி... ஆத்திரப்படாதே! நிதானமாய் யோசித்துப் பார்! அவள் ஏமாற்றி இருந்தால், குற்ற உணர்வுடன் விலகிப் போயிருக்கமாட்டாள். காதலிப்பது தவறில்லை. ஆனால், அவள் நல்ல பெண். ஏதோ இக்கட்டான சூழ்நிலையில் தன்னை இழந்திருக்கிறாள். ஏற்பாடான கல்யாணத்தை நிறுத்த முடியாத சூழ்நிலையில் இருந்திருப்பாள். உன் அன்பு அவளை உன் வசப்படுத்தி இருக்கும். திருமணத்திற்கு பிறகு அவள் உன்மேல் காட்டும் அன்பில் என்ன குறை கண்டாய்?'

'உண்மையைச் சொல்லப்போனால், ஏமாற்றியது அவளல்ல. உன் அப்பாதான்! உனக்கு இப்படியொரு குறை இருப்பது தெரிந்தும்... ஒரு பெண்ணைக் கடைசிவரை மலடியாக்க... மனசாட்சியின்றி அவர் எடுத்த முடிவு தவறல்லவா? ஏழைப் பெண் என்றால் எதுவும் கேட்க



மாட்டார்கள் என்ற தைரியத்தில் அல்லவா, அஸ்வினியை மருமகளாக்கிக்கொள்ள முன்வந்தார்? இது எப்பேர்ப்பட்ட துரோகம்? ஒரு பெண் முழுமை பெறுவது அவள் தாயாகும் போதுதானே? தாயாகும் தகுதி உள்ளவளை உன் மகனின் மகிழ்ச்சிக்காக, மலடியாக்க நினைத்தது குற்றமில்லையா?'

'சில உண்மைகள் கடைசிவரை மறைக்கப்படுவதுதான் நல்லது என்பதால் அஸ்வினி மறைத்திருக்கலாம்.'

'அது தவறல்லவே!'

'பார்க்கப்போனால், அவள் தெரிந்தோ, தெரியாமலோ செய்த குற்றம் உன் மானத்தைதான் காப்பாற்றி இருக்கிறது.'

'நீ இப்படியொரு குறையுடையவன் என்று தெரிந்தால்... உன்னை மதிப்பார்களா? ஏளனமான பார்வைகளும், பரிதாபமான கேள்விகளும் உன்னைக் குத்திக் கிழித்து விடாதா?'

'சில பொய்கள், நல்லதுக்காக உண்மையைப் போல் வலம் வருவதில் தவறில்லை, கோபி!'

'அப்படியானால் நான் என்னதான் செய்யட்டும்?' தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

'எதையும் செய்யாதே! மறந்துவிடு. மன்னித்துவிடு. அப்பா செய்த தவறைவிட உன் அஸ்வினி செய்த தவறு பெரிதல்ல என்பதை மனதில் அழுத்தமாய் பதித்துக்கொள்.

வத்சனின் அப்பா யாரென்ற கேள்வியே உனக்கு எழக் கூடாது. நீதான் அவனுக்கு அப்பா. உனக்கு இந்த உண்மை தெரியும் என்பதைச் சாகும்வரை அஸ்வினிக்குத் தெரியப் படுத்திவிடாதே!

உன் குடும்பம் என்கிற அழகிய தேன்கூடு சிதைந்து போய்விடும். உன் அப்பா செய்த தவறுக்கு பிராயச்சித்தம் தேடவேண்டு மென்றால், உண்மைகளை விழுங்கிவிடு!

வெகுநேர குழப்பத்திற்குப் பிறகு... தெளிந்தான் கோபி!

# 13

தன்னைக் கட்டிப்பிடித்து, கன்னத்தை முத்தத்தால் ஈரப்படுத்திக்கொண்டிருந்த அமுதாவை வியப்பாய்ப் பார்த்தாள், அஸ்வினி.

"என்ன அமுதா, ரொம்ப பூரிப்பா இருக்கே? உன் கணவருக்கு வெளிநாட்டுல இருந்து பெரிய அளவில் வருமானம் கிடைச்சிருக்கா என்ன?"

"சேச்சே... அதெல்லாம் பெரிய விசயமா என்ன? சொல்லப் போனா, ஏற்கனவே பலமுறை அந்த வாய்ப்பு வந்தும் பரத் என்க்காக வேண்டாம்னு விட்டுட்டார்!"

"உனக்காகவா... ஏன்?"

"வெளிநாட்டு வருமானத்துக்கு ஆசைப்பட்டா... அவரோட தொழிலைப் பொறுத்தவரைக்கும் அங்கேயே அஞ்சு ஆண்டாவது இருந்து கவனிச்சுக்கணும். என்னைப் பிரிஞ்சு அவரால இருக்க முடியாது. என்னை மட்டுமல்ல... முக்கியமா, குழந்தையைப் பிரிஞ்சு இருக்க முடியாது. கோடி கோடியா லாபம் கொட்டினாலும் உன்னைப் பிரிஞ்சாதான் கிடைக்கும்னா... அப்படிப்பட்ட பணமே எனக்கு வேண்டாம்னுட்டார்..."

தோழியின் கூற்றில் வெளிப்பட்ட பாசமும் நேசமும் அஸ்வினியை நெக்குருகச் செய்தன.

இந்த அன்பிற்காகத்தானே அஸ்வினி எத்தனையோ சங்கடங்களைப் பொறுத்துக்கொள்கிறாள்? பரத், வத்சனைப் பார்க்கவரும்போதெல்லாம் நெஞ்சில் கடப்பாரைக்கொண்டு இடிப்பது போலல்லவா அஸ்வினி துடித்துப் போகிறாள்? அவளுக்கே தெரியாமல் நிகழ்ந்த தவறென்றாலும், அவனைப் பார்க்கும் போதெல்லாம் தன் பாசமிகு கணவனுக்கு



துரோகம் செய்துவிட்டோமே என்று குமுறிப் போகிறாளே!

இதுவே பெரிய தண்டனை அல்லவா? 'இங்கே வராதீர்கள்' என்று பரத்தைத் தடுக்காமல் இருப்பதுகூட அமுதாவுக்காகத்தானே?

'அஸ்வினியின் நெஞ்சில், கணவரைத் தவிர வேறு யாருமே இல்லை என்பது கடவுளுக்குத்தானே தெரியும்?'

"என்னடி... திடீர்னு எங்கேயோ பறந்திட்டே?" அவள் முகத்திற்கு நேரே சொடக்குப் போட்டு கவனத்தை ஈர்த்தாள், அமுதா.

தன்னிலை மீண்டாள் அஸ்வினி.

"வே...வேறொண்ணுமில்லை... எதுக்காக எனக்கு இப்படி முத்தமழைப் பொழிஞ்சேன்னு யோசிச்சிட்டிருந்தேன்."

"கண்டுபிடிக்க முடியலையா?"

"ஊகூம்..." உதட்டைப் பிதுக்கினாள்.

"நான்..."

"என்ன...?"

"நான்... நான்..." வெட்கத்தோடு தலை கவிழ்ந்தாள்.


"சொல்லுடி... என் தலையே வெடிச்சிடும் போலிருக்கு..."

"மறுபடியும்... நான்!" வயிற்றில் கை வைத்து தோழியின் தோளில் நாணத்துடன் முகம் புதைத்துக்கொண்டாள்.

"ஏய்... உண்மையாவா சொல்றே? எவ்வளவு பெரிய மகிழ்ச்சியான செய்தியைச் சொல்றே... இனிப்பு தராமல் சொல்லலாமா? நீ தரலேன்னா என்ன... நான் தர்றேன்..." தாங்கமாட்டாத ஆனந்தத்துடன் அவள் கையைப் பற்றிச் சமையலறைக்கு இழுத்துச் சென்றாள்.

டப்பாவைத் திறந்து கைநிறைய சர்க்கரையை அள்ளி அமுதாவின் வாயில் போட்டாள்.

"அஸ்வினி..."



"உம்..."

"நாம ரெண்டு பேரும் சின்ன வயசிலிருந்தே ஒண்ணா படிச்சோம். திருமண வாழ்க்கையும் நாம நினைச்சபடி அமைஞ்சது. ஒரே நேரத்திலே குழந்தை பெத்துக்கிட்டோம். இதோ... இப்ப நான் மறுபடியும் உண்டாகி இருக்கேன். இதே மாதிரி நல்ல செய்தியை நீ எப்ப சொல்லப்போறே?"

"என்ன அவசரம் அமுதா? இது நடக்கும்போது நடக்கட்டும்."

"இப்ப குழந்தை வேணாம்னு மாத்திரை ஏதாவது பயன்படுத்துறியா என்ன?"

"சேச்சே... அப்படியெல்லாம் இல்லை..."

"பின்னே? நான் நாலு ஆண்டு போகட்டும்னுதான் இடைவெளிவிட்டு இப்ப உண்டாயிருக்கேன். வத்சனுக்கும் நாலு வயது முடிஞ்சிடுச்சே! எதுக்கும் டாக்டரைப் போய்ப் பார் அஸ்வினி!" என்றாள், கவலையுடன் அமுதா.

அஸ்வினியும் யோசனையுடன் தலையாட்டினாள்.

கோபியைப் பார்த்ததும் ஓடிவந்து கட்டிக்கொண்டான், வத்சன்.

"அப்பா... எங்கே போயிட்டீங்க...?"

பதில் கூறாமல் அவனைப் புதிதாய் பார்ப்பது போல் பார்த்தான். சட்டென இழுத்து முகமெங்கும் முத்தமிட்டான்.

"இந்தா... உனக்காக வாங்கிட்டு வந்தேன்!" என்று நான்கைந்து பொம்மைகளை நீட்டினான்.

"ஹைய்யா..." என்று குதித்த பொடியன், கன்னத்தில் அழுத்தமாய் இதழ் பதித்துவிட்டு ஓடினான்.

சிலிர்த்துப்போனான், கோபி.

இவன் குரல் கேட்டு போட்டது போட்டபடி உள்ளறையிலிருந்து ஓடிவந்தாள், அஸ்வினி. நான்கு நாளாய்

பார்க்காத ஏக்கம் அவள் கண்களில் படர்ந்திருந்ததைக் கவனிக்கத் தவறவில்லை கோபி.

"நாலு நாளா உங்ககிட்டேருந்து போன் வரலே... ரொம்ப பயந்துட்டேன். ஏன்ங்க அப்படி?"

"வேலைதான், அஸ்வினி!"

"எல்லாம் சரியாயிடுச்சா?"

"இனி பிரச்சினையே வராத அளவுக்கு எல்லாம் நல்லபடி ஆயிடுச்சு. பசிக்குது. உன் கையால சாப்பிட்டு நாலு ஆண்டு ஆன மாதிரி இருக்கு. முதல்ல சாப்பாடு எடுத்துவை அஸ்வினி!"

"இதோ!" துள்ளலுடன் ஓடியவளைப் பார்த்துக் கொண்டிருந்த கோபிக்கு மனசு இப்போது தெளிந்த வானம் போல் இருந்தது.

இரவு!

அவன் தலையில் விரல்களை விட்டு கேசத்தைக் கலைந்தவள்... அவன் மார்பில் தலை சாய்த்துக்கொண்டாள்.

களங்கமில்லா நிலவைப் போல் ஒளிவீசிய அவள் முகத்தைப் பார்த்தபோது... அதில் எந்த கல்மிஷமும் இல்லை.

'இவள் என்னவள்... எனக்கு மட்டுமே சொந்தமானவள்... இவள் மனம் நோகும்படி எதுவும் நடந்துவிடாமல் கவனமாய் இருப்பேன்.'

"என்னங்க?"

"என்னடா?"

"நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைக்கமாட்டீங்களா!"

"மாட்டேன்... என்ன சொல்லு!" மென்மையான கன்னத்தை வருடியபடி கேட்டான்.

"அமுதா, மீண்டும் உண்டாகியிருக்கான்னு சொன்னேன்... இல்லையா?"



"ஆமா!"

"வத்சனுக்கும் நாலு வயசாயிடுச்சு..."

அவள் என்ன பேசப்போகிறாள் என்று புரியவும் ஒருகணம் நிலைதடுமாறினான்.

"நாம இன்னொரு..."

"அஸ்வினி..." என்று குறுக்கிட்டான்.

"என்னங்க?"

"ஒவ்வொரு பெண்ணுக்கும் பிரசவம் மறுபிறவி மாதிரின்னு சொல்லுவாங்க... இல்லையா?"

"ஆமா!"

"நீ குட்டியைச் சுமந்திட்டு இருந்தப்ப உன் உடம்பு ரொம்ப பலகீனமா இருந்தது. பிரசவத்தின்போது நீ அலறிய அலறல் எனக்கு இந்தப் பிறவிக்கு மறக்காது. இப்ப நினைச்சாலும் நடுங்குது. எனக்கும் குழந்தைன்னா உயிர். நிறைய குழந்தை களைப் பெத்துக்கணுன்னு ஆசைப்பட்டேன். ஆனா, நீ பட்ட வலியைப் பார்த்த பிறகு அந்த ஆசையே போயிடுச்சு."

"அதெல்லாம் அந்த நேரத்துவரைக்கும்தாங்க. அனுபவித்த வலியெல்லாம் குழந்தையைக் கையில் வாங்கியதும் பஞ்சாய்ப் பறந்திடும்ங்க... இதுக்குப் போய்..."

"இல்லே... அஸ்வினி... நான் முடிவு பண்ணியாச்சு. நமக்கு வத்சன் மட்டும்தான் வாரிசு. உன்னை என் உள்ளங்கையிலே பூப்போல வச்சு தாங்கணும்னு ஆசைப்படுறேன். என் பேச்சை கேட்பே இல்லையா? நமக்கு ஒரு குழந்தையே போதும்!"

கோபியின் மார்பு நனைந்தது.

திடுக்கிட்டான்.

"அஸ்வினி... அழுறியா என்ன?"

"இது அழுகை இல்லேங்க... ஆனந்தம்... இப்படியொரு நல்ல கணவன் கிடைக்க எத்தனை பொண்ணுங்க கோவிலையும்

அரச மரத்தையும் சுத்துறாங்க. ஆனா, நீங்க எனக்கு கிடைச்சது... பெரிய புண்ணியம்தாங்க... பிரசவ வலியை மனைவி மீண்டும் அனுபவிக்கக் கூடாதுன்னு எத்தனை கணவன்மார்கள் உங்களை மாதிரி முடிவெடுப்பாங்க? எனக்கும் குழந்தைன்னா உயிர்தான்!"

"........"

"இப்ப அந்த ஆசையை நான் எனக்குள்ளேயே புதைச்சிட்டேன்." உணர்ச்சிவசப்பட்டு அவன் கழுத்தில் அழுத்தமாய் முகம் புதைத்தாள், அஸ்வினி.

அவளை இறுக அணைத்துக்கொண்டவனின் மனசு வலித்தது.

'மன்னிச்சிடு என் கண்ணே! இதில் என் சுயநலமும் கலந்திருக்கு. என்னை நான் வெளிப்படுத்திக்கொள்ளத் தயக்கமாக இருக்கிறது. ஆனால், உண்மை வெளிப்பட்டு விட்டால், திருமணத்திற்கு முந்தைய உன்னுடைய தவறும் வெளிப்பட்டுவிடும். குற்ற உணர்ச்சி உன்னை ஒரேயடியாகப் பறித்துக்கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனக்கு நீ வேண்டும் அஸ்வினி. என் வாழ்க்கையின் கடைசிப்படி வரை உன் கைப்பற்றிச் செல்லவே ஆசைப்படுகிறேன். ஆபத்தை விளைவிக்கும் அந்த உண்மையைக் கொன்று புதைப்பதில் தப்பே இல்லை!'

அவள் உச்சந்தலையில் காதலுடன், நேசத்துடன் முத்தமிட்டான், கோபி.

அஸ்வினி, சிறுகுழந்தையைப் போல் அவன் மார்பில் புதைந்து கிடந்தாள்.

இப்போது அவள் கண்களில் நீர் மறைந்தது. அழுந்திய பாரம் பனிக்கட்டியாய்க் கரைந்தது.

**(முடிந்தது)**